செந்தமிழ்ச்செல்வி

சிலம்பு-௩ 3

பரல் ௧ 9

[illegible]-புரட்டாசி

1925.

JL
031~211,N22
N25.3-9
166171

937

30NOV192

r. No. M. 172



# செந்தமிழ்ச்செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ௩ } குரோதன புரட்டாசி மீ { பரல் ௯

உள்ளுறை


இறையனாரகப்பொருள் ௧௭௭

புறநானூறும் தமிழர்மாண்பும் ௧௮௧

நம்பியாண்டார் நம்பிகளும் இராஜ இராஜ சோழனும் ௧௯௰

தெய்வங்களின்பெயர் வரலாறு ௧௯௫

[illegible]டங்கல் ௨௦௧


தீபாவலிப்பண்டிகை நிர்ணயம் ௨௦௩

திருக்குற்றாலத் தேவாரம் ௨௧௨

தமிழர் பல்கலைக் கழகம் ௨௧௩

குறிப்பு ௨௧௪

மதிப்புரை ௨௧௫

The South India Saiva Siddhanta Works
Publishing Society, Tinnevelly, Ltd.

...க் கையொப்பம் ரூ. 3 ... தனிப்பிரதி அணா [illegible]

All Rights Reserved.



திருக்குற்றால நீர்வீழ்ச்சி.


ஓம்

திருச்சிற்றம்பலம்

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள்தோறும் வெளிவருவது

சிலம்பு ௫ } மெய்கண்டான் ஆண்டு-௭௨ புரட்டாசித் திங்கள் 1925ஆம் செப்டம்பர்மீ—அக்டோபர்மீ { பரல் ௧


திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

---

## இறையனார் அகப்பொருள்


[கா. சுப்பிரமணிய பிள்ளை M.A., M.L.]



(௧௧௩-ம் பக்கத் தொடர்ச்சி)


இயற்கைப் புணர்ச்சியினை மெய்யுறுபுணர்ச்சி யென்றும், உள்ளப்புணர்ச்சி யென்றும் இருவகையாகக் கூறுவர் நூலோர். இந் நூலுரையாசிரியர் உழுவலன்பினால் நேர்வது மெய்யுறு புணர்ச்சியாமென்று கிறுவியுள்ளார். அன்பு நிறைந்த உள்ளத்தையுடைய தலைவனும் தலைவியும் தமது இயல்பினை யிழந்து

031 — 211, 25 · 3 · 69
16017



கூடுமிடத்து உள்ளப்புணர்ச்சி யளவில் தாங்கள் நின்றுவிடுதல் இயல்பின்றாகலான் அவர்கள் கூட்டம் உள்ளப்புணர்ச்சி யாதல் சாலா தென்பது உரையாசிரியர் கருத்து. மேலும், ஒருவரை யொருவர் உள்ளிய பின்னர் பிறரைக் கருதாராகலான் அத்தகைய கூட்டத்தாற் போந்த இழுக்கு யாது மில்லை யென்பதும் அவர் கருத்தாகும். மக்களாகலான் உள்ளப்புணர்ச்சி யளவில் கூட்டத்தின் முற்றுப் பேறும் இல்லை. ஆதல் பற்றியும் மெய்யுறு புணர்ச்சியே வேட்கை மிகுதியால் விளைவதாகும். அன்பின் நிலையும் பலபடித்தாமாகலின் உள்ளப்புணர்ச்சியே நிகழ்தற்குரிய ஏதுக்களும் உண்டு. தலைவனும் தலைவியும் தத்தமக்குரிய நான்கு குணங்களையும் முற்றிலும் இழந்து விடாத நிலையில் உள்ளப்புணர்ச்சியே சாலுமென்ப. இக்கருத்துப்பற்றியே 'பெருமையும் உரனும் ஆடூஉமேன, அச்சமு நாணமு மடனுமுந் துறுத்த, நிச்சமும் பெண்பாற் குரிய வென்ப' என்ற இரண்டு செய்யுளுக்கும் உரைகூறிய ஆசிரியர் உள்ளப்புணர்ச்சி மாத்திரம் நிகழ்வதற்கு அச் சூத்திரங்களுள் கூறிய குணங்கள் காரண மென்ப. ஆயினும் அவ்வுள்ளப்புணர்ச்சி நிகழ்ந்து வரைந்து கொள்ளுதல் உலக வழக்கின்பாற் படுமென்றும், நாடக வழக்கின்பாற் படும் களவியலுக்கு அது சிறப்புடையதன்றென்றும் அவ்வாசிரியர் கூறியுள்ளார். ஆசிரியர் திருவள்ளுவரும் புணர்ச்சி மகிழ்தல் என்னும் அதிகாரத்துள் மெய்யுறு புணர்ச்சியே விதந்தோதினர். அது 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு மொண்டொடி கண்ணே யுள' என்பதனுலும் 'தாம்வீழ்வார் மென்றோட்டுயில்' என்பதனுலும், 'உறுதோ றுயிர்தளிர்ப்பத் தீண்டலால்' 'வளியிடை போழப் படாஅ முயக்கு' என்பதனுலும் தெற்றெனப் புலப்படும்.

இயற்கைப் புணர்ச்சிக்குப்பின் நிகழும் ஒருதலை வேட்கை, உள்ளுதல், மெலிதல் முதலியன நிகழற்பாலன வென்று தொல்காப்பிய உரையாசிரியர் கூறுநிற்ப அவை இயற்கைப் புணர்ச்சியின் ஒரு பகுதியை மெய்யுறு புணர்ச்சிக்கு முற்படுவன வென்று நம்பியகப்பொருள்விளக்கம் கூறுகின்றது. அகப்பொருள் விளக்கக் கூற்று அத்துணை பொருத்த முடையதல்ல.



இருவரும் எதிர்ப்படும் பொழிலின் தன்மையைப் பற்றியும் ஆடவர் பெண்டிர் முதலியோர் வழக்கங்களைப்பற்றியும் இந்நூலுரையினுல் அறியக்கிடப்பன பல. அக்காலத்தில் சிறுமிகள் பொழிலகத்தே சென்று பூக் கொய்தும் மாலை தொடுத்தும் மயிலொடு மாறுடியும் குயிலொடு மாறுகூவியும் வாசமலர்க் கொடியில் ஊசலாடியும் அருவியாடி அஞ்சுனை படிந்தும் பொழுது போக்கின ரென்பது இதன் உரையாற் புலனும். செல்வர்கள் தமது இருக்கைக்கு அருகாகப் பல்வகை மலர் மரங்களும் செறிந்த செய்குன்றமைப்பதும் அதன்கண் காட்சி நயமிக்க கட்டிடங்களும் பூங்கொடிப் பந்தர்களும் பொய்கைப் படித்துறைகளும் செம்மையாக அமைத்து மகிழ்ந்தன ரெனவும் தெரிய வருதலால் இக்காலத்தில் மேல் நாட்டினர் கூறும் (Landscape Gardening) காட்சித்திறமிக்க பொழிலமைப்பைப் பண்டைத் தமிழர் அறிந்திருந்தன ரென்பது நன்குபோதரும். இங்கு கூறப்பட்ட பொழி லென்பது மலைச்சார்பகத்தே உள்ளதாதலின் அரசிளங் குமரரும் அவர் தோழரும் வேட்டம் போய் விளையாடுவதும் வழக்கமாகக் கூறப்பட்டது. செல்வர்கள் பரிபூட்டிய தேரிற் செல்லுதல் பண்டைக்கால வழக்காயிருந்தது. 'பால்புரை புரவி நால்குடன் பூட்டி' என்ற புறநானூற்று அடியையுங் காண்க. ஆடவர் காலிற் கழலணிவதும், உடம்பில் நறுஞ்சாந்தணிவதும், சுருண்டு நீண்ட தலைமயிரைப் பொன் கயிற்றினுற் பிணிப்பதும் அதிற் பூச்சூடுவதும் வழக்கமாக இருந்ததென்பது தெரியவருகிறது. பெண்டிரது வனப்பை விரித்துரையாது 'ஒளி பொருந்திய நெற்றியுடையோர்' என்ற அளவிற் பெறவைத்தார் இந்நூலுரையாசிரியர். தலைவியின் வனப்புக்கூறும் செய்யுள் முதலியவற்றைப் பாண்டியன்மீது ஒரு புலவர் பாடிய கோவையினின்றும் எடுத்த மேற்கோள்களால் இவ்வுரையாசிரியர் விளக்கியுள்ளார். திருச்சிற்றம்பலக்கோவையிலுள்ள திருப்பாசுரங்களை இவ்வாசிரியர் எடுத்து வழங்காமைக்குக் காரணம் இவ்வுரை யெழுதுங் காலத்து அது எழுதப்படாமை கருதியோ யாதோ தெற்றென விளங்கவில்லை. காட்சி முதலிய துறைகளுக்கு திருக்கோவையாருட் கூறப்பட்ட செய்யுட்கள் சிறந்த

எடுத்துக் காட்டாகும். உரையாசிரியர் காட்டிய பாடலினுள்
ளும் தலைவியைப் பூங்கொடியாகவே புனைந்துரை காணப்படும்
எனினும் திருக்கோவையாரி லுள்ள திருப்பாசுரம் போல அது
அத்தனை பொருள்வள முடையதல்ல.

திருக்குறளுள் தலைவியினது கண்ணிணையே மிக நயம்பட
ஆசிரியர் புனைந்துரைத்தார். தகையணங் குறுத்தல் என்ற அதி
காரத்துள் ஆறுகுறள் கண்ணின் சார்பாகவே கூறப்பட்டுள்ளன.
மக்களது உடம்பிற் சிறந்த பகுதி முகமாகும். முகத்திற் சிறந்த
பகுதி கண். கண்ணிற் சிறந்த உறுப்பில்லை யாதலாலும் அகத்
துள்ள வேட்கையைக் கண்களே தெளிவாகக் காட்டுவன வாத
லாலும் கண்ணிணையே விதந்தோதினர் ஆசிரியர். உள்ள வொற்
றுமையைத் தெரிவிப்பது கண்ணுகலின் அதன் சிறப்புச் சொல்
லொணாதது. உடல் நயத்தோடு உள்ள நயத்தையும் உணர்ந்து
இன்பந்துய்க்கும் இயல்புடையார்க்கு பெண்ணின் சிறந்த பண்
பாகிய நாணமும் மடநோக்கும் பெரிதும் அழகு செய்வதிற்
சிறந்தனவாகலின்,

‘ பிணையேர் மடநோக்கு நாணு முடையாட்
கணி யெவனோ வேதில தந்து ’

என்றனர். கண்ணிற்கடுத்த நிலையில் ஒளிமிக்க நுதலும் அழகு
செய்வதாகும். ஆகலின், அதனைப்பற்றி ஒரு குறள் இருக்கி
றது. மாதர்க்குச் சிறந்த உறுப்பு அவரது மார்பாகலின் அத
னையும் ஒரு குறளால் ஆசிரியர் கூறினர். அணி முதலியவற்
றாலாகிய செயற்கை யழகினும் இயற்கை யழகே சிறந்த தென்
பது ஆசிரியர் கொள்கை. காதில் மாதர் குழை யணிவது ஆசிரி
யர் காலவழக்குப்போலும். அணிபூண்பதற்குரிய சிறுப்புக்களுள்
காது சிறந்ததென்பது அவர் கருத்து. சாயலின் மென்மையால்
தலைவிக்கு மயிலை உவமை கூறினர். இங்ஙனம் தலைவியினது
இயற்கை யழகினையும் அவளது இன்றியமையாத சிறந்த உறுப்
பினையும் அவளது உள்ளச் செம்மை யுணர்த்தும் கண்ணின்
இயல்பையுமே ஆசிரியர் திருவள்ளுவர் விதந்தோதி உயர்ந்த



வனப்பு இனைத்தென்பதை இனிது காட்டினர். அணியினுஞ்
சிறந்த பன்னிற ஆடையின் வனப்புத் தோன்ற மயிலென்னு
மொன்றலும் ஒன்று.

“ அணங்கு கொலாய் மயில்கொல்லோ கனங்குழை
மாதர்கொல் மாலுமென் னெஞ்சு ”

இதனால் பண்டைத் தமிழரது உயர்ந்த பாமுறை மிக்க சால்
புடைத் தென்பது யாவர்க்கும் விளங்கும். உச்சிமுதல் உள்ளங்
கால் வரையுள்ள உறுப்பு ஒவ்வொன்றையும் தத்தமது புனைந்
துரையாற்றலுக் கேற்ப உயர்வு நவிற்சியாற் கூறும் செயற்கை
முறை ஆரியர்க்கே ஆதியில் உரியதன்றிப் பண்டைத் தமிழர்
பாற் காணப்படாததாகும். ஆசிரியர் திருவள்ளுவர் காலத்திற்
குப் பின் வந்த பாவலர் பலரும் விரிவுற வனப்புக்கூறும் வழக்
கத்தைப் படிப்படியாகப் பெருக்கி விட்டார்கள்.

திருச்சிற்றம்பலக்கோவையாருள் காட்சித் துறைக்குக்
கூறிய திருப்பாட்டானது பண்டை முறையினும் பிற்கால முறை
யினும் உள்ள நயங்களை ஒருங்கு கொண்டுள்ளது. மலர்களை
யுணர்த்தும் உருவகச் சொற்களினாலே தலைவியின் திருமுகம்
முதல் திருவடிவரையுள்ள வனப்பினை செவ்விதின் விளக்கினர்.
சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமும் இவ்வாறு அமைதல்
மிகவும் அரிது.

‘ திருவளர் தாமரை சீர்வளர் காவிகளீசர் தில்லைக் [தெய்வ
குருவளர் பூங்குமிழ் கோங்கு பைங்காந்தள் கொண் டோங்கு
மருவளர் மாலையொர் வல்லியி னொல்கியன நடைவாய்ந்
துருவளர் காமன்றன் வென்றிக் கொடிபோன் றொளிர்கின்றதே’

திரு என்பதற்குக் கண்டாரால் விரும்பப்படும் தன்மை நோக்க
மென்று பேராசிரியர் பொருள் கொண்டார். திருமகள் என்பது
தவறென்பது நன்றாக விளக்கியுள்ளார். காட்சி யளவிலே உவகை
விளைவதை ‘திரு’ என்ற சொல் குறிக்கின்றது. கண்ணின் சிறப்
பையுணர்த்த ‘சீர்வளர்’ என்றார். ஐந்திணை யொழுக்கத்திற்
கேதுவாகிய தலைவி என்பார் ஐந்திணைப் பூக்களையும் தொகுத்

துரைத்தார். தாமரை மருத நிலத்திற்கும், காவிகளாகிய குவளைப் பூக்கள் நெய்தற்கும், குமிழ் முல்லை நிலத்திற்கும், காந்தள் குறிஞ்சி நிலத்திற்கும் சிறந்தமலர்களாகும். தாமரை என்பது முகத்திற்கும், காவிகள் கண்ணிற்கும், குமிழ் மூக்கிற்கும், கோங்கு அரும்பு முலைக் கண்ணிற்கும், காந்தள் கருத்திற்கும் உவமையாகும். மாலை என்ற சொல் கோதை யென்ற சொற்போல பெண்பாலாரைக் குறிக்கும். வல்லியின் ஒல்கி என்றதனால் தலைவி மேனியின் மென்சாயல் விளக்கப்பட்டது. அன நடைவாய்ந்து என்றதனால் திருவடிச்சீர் இயம்பப்பெற்றது. உருவளர் என்றதனால் வளர்ந்தமைந்த காலத்தும் மேலும் வளர்வதாகக் காட்டும் நயமாகிய எழில் கூறப்பட்டது. இவ்வாறு தலைமுதல் கால்வரை சுருக்கமாகவும் விளக்கமாகவும் புனைந்துரை செய்தல் பிறர் கோவைநூலுள் காணப்படா. கண்டார் மனங்கவரும் வனப்பென்பது காமன்றன்வென்றிக் கொடிபோன்றொளிர்கின்றதே என்பதாற் பெறப்படும். குறிஞ்சி நிலத்திற்குரிய காந்தட் பூவினை இறுதியிற் கூறினமையால் புணர்தலும் புணர்தல் நிமித்தமுமாகிய குறிஞ்சியே கூறினரென்றும், பிற நிலப்பூக்களும் இக்குறிஞ்சியையே சிறப்பித்து நின்றன என்றும், திருக்கோவையாருரையாசிரியர் கருதுகின்றார். ‘ஈசர் தில்லை’ என்றமையால் இம்மை மறுமை வீடு மூன்றும் குறித்தவாறு என்ப. இத்திருப்பாட்டின் சொற்கள் அப்பர்சுவாமிகள் தேவாரத்திற்போந்த ஓர் திருப்பாசுரத்தின் சொற்களோடு ஒத்து நிற்பது வியக்கத்தக்கது.

‘திருவமர் தாமரை சீர்வளர் செங்கழுநீர் கொணெய்தல்
குருவமர் கோங்கங்கு ராமகிழ் செண்பகங் கொன்றை வன்னி
மருவமர் நீள்கொடி மாடமலி மறையோர் கணல்லூர்
உருவமர் பாகத் துமையவள் பாகனை யுள்குதுமே’

(திருநல்லூர் - திருவிருத்தம்)

(தொடரும்)

---



# புறநானூறும் தமிழர் மாண்பும்

[திரிசிரபுரம், ம. பெரியசாமிப்பிள்ளை]

(௧௨௰-ம் பக்கத் தொடர்ச்சி)

கற்பு:—கல்வி என்பதுபோலக் கற்பும் ‘கல்’ என்னும் வினை அடியாகப் பிறந்த பெயராம். கற்பென்றது ஒத்த அன்புடைய தலைவனும் தலைவியும் மணந்து இல்லறம் நடாத்துங் காலத்து அவர்கட்குரிய ஒழுகலாற்றினை என்னை? கற்க வேண்டியவற்றுள் இது இன்றியமையாதது ஆகலான். தலைவன்—உருவும் திருவும் அன்பும் குணமும் முதலியவற்றாற் சிறந்த ஆண்மகன்; தலைவி—அவைபிற்றாற் சிறந்தபெண். இத்தகைய தலைவனும் தலைவியும் ஊழ்வயத்தால் ஒருவரை ஒருவர் அறிந்து ஒத்த அன்புடையராய் விருப்புற்று உள்ளக் கலப்பு (அன்பின் முதிர்ச்சியால் மெய்யுறு கலப்பும் நிகழ்தல் உண்டு) எய்திய பின்னரே மணம் நிகழும் வழக்கம் பழந் தமிழ்மக்களிடைக் காணப்பெறுவது. இங்ஙனம், பிறர் அறியாமல் தலைவன் தலைவி இவர்களிடை நிகழும் கலப்பிற்கு உரிய ஒழுகலாற்றினைக் களவொழுக்கம் என்றும் இதன் பின்னர் மணம் நிகழ்ந்து இல்லறம் நடாத்துங்கால் அதற்குரிய ஒழுகலாற்றினைக் கற்பொழுக்கம் என்றும் நமது பழந் தமிழ்நூல்கள் கூறும். இவ்வாறு மணம் நிகழப்பெற்ற கணவனும் மனைவியும் ஒருவரை யொருவர் உயிரெனக் கருதிக் கூடி ஒழுகுவர். இத்தகைய ஒழுக்கத்தானாய இன்பத்தையே அகப்பொருள் எனத்தமிழ் நூல்கள் கிளந்தோதுவதூஉம் என்க. இதன் விளக்கமெல்லாம் திருக்குறள் காமத்துப் பாலினும் அகப்பொருள்பற்றிய மற்றைத் தமிழ் நூல்களினும் காணலாகும். மணமகன், மணமகள் இவர்கள் மனம் ஒத்த பின்னர் நடைபெறும் மணமே தலைசிறந்தது என்பதனாலேயே தொல்காப்பியம் திருக்குறள் முதலிய நூல்கள் அகப்பொருளைக் களவு, கற்பு எனப் பிரித்துக் கூறுகின்றன. இக்காலத்தோ எனின் மனம் கலந்து அன்பு கொளற்குரிய மணமக்களைத் தேடி மணம் பேசுதல் பெற்றோர் பொறுப்பாய்விட்டது. ஆகலான் பெற்

றோர்கள் மணம் பேசப் புகுங்கால் எவ்வளவு குறியுடையவர் களாய் இருத்தல் வேண்டும்!

இனிக் 'கற்பென்பது கொண்டவனிடத்து ஒழுகும் ஒழுக்கத்தையும் பெரியோரிடத்து ஒழுகும் ஒழுக்கத்தையும் முறையே பெற்றோரும் கணவனும் தலைவிக்குக் கற்பிப்பதும் திருமணம் நடக்குங் காலத்து கற்பிக்கப்படுவதும் ஆம்' என்று கற்பிற்குப் பொருள் கூறப்படுதலையும் கொள்ளுதல் இழுக்கன்று. "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்பது மேற்கூறியவற்றுள் அடங்கிவிடும் ஆகலின், இதுபற்றி வேறு கூறவேண்டா.

இல்வாழ்க்கைத் துணையாகிய இல்லாளிடத்து கற்பு என்னும் கலங்கா நிலைமை உளதாயின் அவ்வில்லாளைப்போலப் பெறுதற்கரிய பேறு பிறிதில்லை என்பதனை "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும், திண்மை யுண்டாகப் பெறின்." என்று கூறினர் திருவள்ளுவனார். கற்புடைய மகிள் தன் கொழுநனை (கணவனைத்) தெய்வமாகவே கருதுவாள். "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுது எழுவாள்." (திருக்குறள்). "குலமகட்குத் தெய்வம் கொழுநனே" (நீதிநெறி விளக்கம்) என வருதல் காண்க. இத்தகைய கற்புடைய மகளிரின் ஆற்றலுக்குத் தமிழ் நாட்டுச் செய்தியாகிய சிலப்பதிகாரத்துக் காணப்படும் கண்ணகியின் வரலாறே போதிய சான்றாம். கற்புடை மகளிர்க்குத் தெய்வமும் ஏவல் செய்யும். "தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள், பெய்யெனப்பெய்யும் மழை" என்பது திருக்குறள்

கற்பென்பது தலைவன் தலைவியர் மணந்து உயிர் ஒன்றும் உடல் இரண்டுமாக ஒழுகி இல்லறம் நடாத்துங்கால் அவர்க்குரிய ஒழுகலாற்றினைப் பற்றியதாகலின், இது பெண்பாலர்க்கேயன்றி ஆடவர்க்கும் உரியதாகும். ஏதோ சிலசில காரணம் பற்றி ஆடவர்க்குள் இக் கட்டுப்பாடுச் சிறிது நெகிழப் பெற்றமையால் கற்புப் பெண்டிர்க்கே உரியதாக வழங்கப் பெறுகின்றது. எனினும் பிறனில்விழைதல் முதலியன அறவே வெறுக்கற்பாலன என்பது திருக்குறள் முதலிய அறநூல் வழக்கானும் ஆன்றோர் ஆட்சியானும் நன்கு அறியப்படுவதொன்றாகும்.



இப்பெற்றித்தாய கற்பு கடவுட்டன்மை யமைந்தது என்று கொண்டவர் நமது முந்தையோர்: "கடவுள் சான்ற கற்பிற் சேயிழை, மடவோள்......" (புறம்—௧௯௮) என வருதல் காண்க. கடையெழு வள்ளல்களில் ஒருவனாகிய மலையமான் திருமுடிக் காரியைக் கபிலர்பெருமான் பழித்தது போலப் புகழ்கின்றவர், காரி வரையாது கொடுக்கும் வள்ளலாகலின் அவனது பொருளும் நாடும் இரவலர்க்கும் அந்தணர்க்கும் உரியவையெனக் கொண்டு, 'வடமீனாகிய அருந்ததியை ஒக்கும் கற்பினையும் மேன்மையான மொழியினையும் உடைய உன் மனைவியாகிய அரிவையினுடைய தோள் மாத்திரை யல்லது (உன் மனைவியைத் தவிர) 'நினது' என்று சொல்ல உனக்கு யாதொரு பொருளும் இல்லை; ஆயினும் நீ செருக்கினை உடையவனாயிருக்கின்றாய்; இதற்குக் காரணம் என்னை?' என்பதனை

"வடமீன் புரையுங் கற்பின் மடமொழி
அரிவை தோளள வல்லதை
நினதென இலை;நீ பெருமிதத் தையே." (புறம் - ௧௨௨)

எனக் கூறுகின்றார். இது காரியின் மனைவியேயன்றிக் காரியும் கற்புடையவன் என்பதை விளங்கக் காட்டுகின்றதன்றோ? கற்புடை மகளிர் கணவனை இழந்தவழிக் கணவன் பொருட்டாகவே அழகு செய்தற்கமைந்த அணிகலன்களைக் களைந்து தலைமயிரைக் குறைத்துவிடுதலும் நீர்ச்சோறு, எள்ளரைத் துவையல், வேளைக்கீரை, அல்லி விதையாகிய புல்லரிசி ஆகிய உடலுக்கு மிகுந்த உரன் தராதவற்றை உணவாகக் கொள்ளுதலும் பாயுமின்றி வெறு நிலத்திற் படுத்தலும் ஆகிய கைம்மை நோன்பு நோற்றல் பல புறப்பாட்டுக்களால் அறியலாகும். இதுவேயுமன்றித் தலையாய கற்புடைய மகளிர் கணவனை இழந்தவழி அன்பு மிகுதி பற்றி உண்டான ஆற்றாமையினால் தீயின்கண் பாய்தலும் உண்டு. இது, பூதபாண்டியன் தேவி பெருங்கோப்பெண்டு தீப்பாய்வாள் 'கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிர் கூட்டத்துள் சேர்ந்

தேம் அல்லேம் யாம்; புறங்காட்டில் (சுடுகாட்டில்) உண்டாக்கப்பட்ட கரிய கட்டைகளால் ஆகிய பிணப்படுக்கை உங்களுக்கு அரிதாகுக; எமக்கு, எம்முடைய பெரிய தோளினையுடைய கணவன் இறந்தானாக, முகையாய் இல்லாது வளவிய இதழ்கள் மலர்ந்த தாமரைகளையுடைய நீர் நிறைந்த பொய்கையும் தீயும் ஒரு தன்மைத்து' என்பதனை

''உயவற் பெண்டிரேம் அல்லேம்; மாதோ
பெருங்காட்டுப் பண்ணிய கருங்கோட் டீமம்
நுமக்கரி தாகுக தில்ல எமக்கெம்
பெருந்தோட் கணவன் மாய்ந்தென அரும்பற
வள்ளித ழவிழ்ந்த தாமரை
நள்ளிரும் பொய்கையும் தீயுமோர் அற்றே' (புறம் - உசசு)

எனக் கல்மனமும் கசிந்துருகுமாறு, தன்னைத் தீயில் விழுவதினின்றும் விலக்குவோரை நோக்கிக் கூறுவதால் பெறப்படும் என்க. இத்தீப்பாய் செய்தி இது பொழுதைய நாகரிகத்துக்கும் ஆராய்ச்சிக்கும் எட்டாததொன்றேயாயினும் தலையன்புடைய மகளிர் சிலர் கணவன் இறந்தவுடன் ஒரோவழி ஏதேனும் ஓராற்றால் உயிர் நீத்தலை இக்காலத்தும் அவ்வப்போது கேட்கின்றோமாகலின், பண்டைக் காலத்து நிகழ்ந்த இச்செய்தி எளிதில் மறுக்க ஒண்ணாததொன்றாம். ஆகவே, பழந்தமிழர் கற்புடைமையை மிகவும் குறிக்கொண்டு போற்றிக் கற்பு நெறியில் ஒழுகினவர் என்க.

ஆண்மையும் வீரமும்:—ஆண்மை என்பது ஆள் என்னும் வினையடியாகப் பிறந்த பெயர். ஆண்மை—ஆளுந்தன்மை: என்றது எத்தொழிலையும் செந்நெறியில் ஆட்சி செய்யும் முறைமை. வீரம் என்பது மறம், தறுகண்மை, திண்மை எனப் பொருள்படுவதோர் வடசொல். வீரம் ஆண்மையுள் அடங்கும்; ஆண்மை வீரத்தினுள் அடங்காது. என்னை? ஆண்மைக்கு மனத்திண்மை உதவியாக நிற்றலானும் திண்மைக்கு ஆண்மை வேண்டப்படுவதின்மையானும் என்க.



இவ் ஆண்மையும் வீரமும் எல்லாத் தொழிலுக்கும் உரிய எனினும் மிகுதியும் போர்த்தொழில் குறித்தே வழங்கப் பெறுகின்றன. இத்தொழிற்கு இவ்விரண்டு தன்மைகளும் வேண்டப்படுவவெனினும் ஆண்மையினுள் அடங்கும் வீரமே கலங்கா நிலைமையைத் தருதலின் போர்த்தொழில் பற்றிப் பேசுங்காலை இவ்வீரமே முன்னிற்கின்றது. வீரம் இல்லாதவனுக்கு எத்தகைய படைக்கலன்களிருப்பினும் உதவிப்படைகளிருப்பினும் அவையிற்றாற் சிறிதும் பயனின்றாம். ஆகலின் இப்பெற்றித்தாய வீரம் உடையவரே வீரர்.

ஒரு நாட்டிற்குத் தற்காப்பின் பொருட்டும் பகைமேற் செல்லும் பொருட்டும் வீரர்கள் இன்றியமையாது வேண்டப்படுகின்றனர். கொடியாரை அரசன் ஒறுத்தல் அரச நீதியின்பாற் படுமேயன்றிக் கொடுமையின்பாற் படாது; அதுவேயுமன்றிப் பயிரை வளரவொட்டாத களையை வாங்கியதனோ டொக்கும்: ''கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ், களைகட்டதனொடுநேர்'' என்பது திருக்குறள். இவ்வொறுத்தற்கும் பகைமேற் செல்லுதற்கும் அரசற்குத் துணையாவார் வீரர்களே. தமிழ் அரசர்களும் சிறந்த வீரர்களாகவே விளங்கினர். கூற்றுவனே எதிர்த்துவரினும் அவனுடனும் எதிர்நின்று போர் புரியும் உள்ளத்துணிவும் உயிரையும் பொருட்படுத்தாத தன்மையும் வீரர்களுக்கு இருத்தல் வேண்டும் என்பர்: ''மருந்தில் கூற்றத் தருந்தொழில் சாயாக், கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி.'' (புறம் - ௩) என்றும், ''கூற்றுடன்று மேல்வரினும் கூடி எதிர்க்கும், ஆற்ற லதுவே படை.'' (திருக்குறள்) என்றும் வருதல் காண்க. வீரர்களைப்பற்றிய மற்றைச் செய்திகளெல்லாம் திருக்குறளில் படைமாட்சி, படைச்செருக்கு என்ற அதிகாரங்களிற் கண்டுகொள்க. போரில் எதிர் நின்று பொருது உயிரை நீத்தவர்கள் வீர யாக்கையோடு துறக்கம் புகுவர் என்றால் இவர்களின் பெருமை எத்தன்மையது!

நமது தமிழ் மக்களில், இத்தகைய வீரர்கள் ஆடவருள்ளேயேயன்றிப் பெண்டிருள்ளும் விளங்கினர். இவ்வீரமகளிர்

தமது கணவன், மகன் முதலியோர் போரில் புறங்காட்டாது நின்று பொருது, உயிர்விட்டேனும் வீரத்தை நிலைநாட்டினர் என்று கண்டால், அதனாற் கழிபேருவகை உறுவர் என்பது பல புறப்பாட்டுக்களால் அறியலாகும். இத்தகைய வீரப் பெண் மணிகளை முதிற் பெண்டிர் என்றும் வீரத்தாய்மார் என்றும் வழங்குவர்.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் என்பவர் ஓர் வீரத் தாயின் மறத்தைக் கூறுங்கால், 'நரம்பெழுந்து வெளித்தோன்றும் தசை குறைந்த மெல்லிய தோளினையும் முளரிபோன்ற மருங்கினையும் உடைய முதியவள் தன்மகன் படைக்கு அஞ்சிப் பின்னிடைந்தான் என்று பலர்கூற, அதைக் கேட்டு 'என் மகன் பெரும்போருக்கு அஞ்சி எதிர் நிற்கலாற்றாது மனமுடைந்தனனாயின், அவன் பாலுண்ட எனது முலையை அறுத்திடுவேன்' எனச் சினந்து வாளைக் கையிற்கொண்டு, உதிரத்தாற் சிவந்த போர்க்களத்திற் கிடக்கும் பிணங்களைப் புரட்டித் துழாவுவோள் வெட்டுண்டு சிதைந்து கிடந்த தன் மகனைக் கண்டு, தான் அவனை ஈன்றபொழுதிலடைந்த மகிழ்ச்சியினும் பெரிதாகிய மகிழ்ச்சியை அடைந்தாள்' என்பதனை,

''நரம்பெழுந் துலறிய நிரம்பா மென்றோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படையழிந்து மாறினன் என்றுபலர் கூற
'மண்டமர்க் குடைந்தனன் ஆயின், உண்டஎன்
முலையறுத் திடுவென் யா'னெனச் சினைஇக்
கொண்ட வாளொடு படுபிணம் பெயராச்
செங்களந் துழவுவோள் சிதைந்துவே றாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே.'' (புறம் - ௨௭௮)

எனக்கூறினர். ஒக்கூர் மாசாத்தியார் என்பவர் மற்றொரு வீரத் தாயின் சிறப்பைக் கூறுங்கால் 'சிந்தை கெடுக; இவள் துணிவு கடியது; இவள் மூதின் மகளிர் என்றற்குத் தகுதி யுடையவள்; முந்தைநாள் நடந்த போரில் இவள் தந்தை யானையை வேலால் எறிந்து தாக்கிப் போர்க்களத்து இறந்தனன்; நேற்று நடந்த போரில் இவள் கணவன் கவர்ந்து செல்லப்படும் பசு நிரைகளை எதிர் நின்று தடுத்து ஆண்டு உயிர்நீத்தனன்; அங்ஙனமாகவும் ஒரே மகனையுடைய இவள் போர்ப்பறையைக் கேட்டு அதனை விருப்புற்று மயங்கித் தனது மகனுடைய விரித்த மயிரையுடைய குடுமியை எண்ணெய் தடவிச் சீவிமுடித்து, வெள்ளிய ஆடையை உடுத்து, வேலைக் கையிற் கொடுத்துப் போர்முகம் நோக்கிப் போவாயாக எனப் போருக்கு விடுப்பாள்' என்பதனை,



''கெடுக சிந்தை, கடிதிவள் துணிவே,
மூதின் மகளிர் ஆதல் தகுமே;
மேனா ளுற்ற செருவிற் கிவள்தன்னை
யானை யெறிந்து களத்தொழிந் தனனே;
நெருநல் உற்ற செருவிற் கிவள்கொழுநன்
பெருநிரை விலக்கி யாண்டுபட் டனனே;
இன்றும்,
செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி
வேல்கைக் கொடுத்து வெளிது விரித்துடீஇப்
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி
ஒருமகன் அல்லது இல்லோள்
செருமுகம் நோக்கிச் செல்கென விடுமே.'' (புறம்-௨௭௯)

எனக்கூறினர். என்னே! இவ்வீர மகளிரின் துணிவும் மறமும். மகளிரே இத்தகைய வீரமுடையவராயிருந்தனர் என்றால் ஆடவர் வீரச் சிறப்பினை விதந்து கூறவும் வேண்டுமோ? போரெனிற் புகலும் புனைகழல் மறவர்'' (புறம்-௩௧) அன்றோ தமிழ வீரர்!

(தொடரும்)

# நம்பியாண்டார் நம்பிகளும் இராஜ இராஜசோழனும்

[வேலூர். C. S. இராஜாப்பிள்ளை]

செல்வமலி குன்றத்தூர்ச் சேக்கிழார்பெருமான் அருளிய பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணத்திற்கு முதனூலாக வுள்ள திருத்தொண்டர் திருவந்தாதியை அருளிச் செய்த பெரியோரே நம்பியாண்டார் நம்பிகளாவார்.

சைவசமயப் பெருநெறியைக் கைக்கொண்டாரனைவரும் நம்பிகள் சரித்திரம், அவரது காலம் முதலிய எல்லாவற்றையும் உணர்தலாற் பெரும்பயன் பெறுவாராகலின் என் சிற்றறிவுக் கெட்டியவாறு இவர்களைப்பற்றி ஆராய்ச்சிசெய்ய முன்வந்தேன்.

யான் எழுதத் தொடங்கிய இவ்வாராய்ச்சியிற் குறைகள் காணப்படுமாயிற் பெரியார் அவற்றைத் திருத்துமாறும் வேண்டுகின்றேன்.

திருமுறை கண்டபுராணம், பதினொராந் திருமுறையில் நம்பிகளியற்றிய பிரபந்தங்கள், சில கல்வெட்டுகள், பெரியோர்களது கர்ண பரம்பரையாக வழங்குஞ் சில கொள்கைகள் ஆகிய இவற்றை ஆதரவாகக் கொண்டு தொடங்கும் இவ்வாராய்ச்சியானது, சித்தாந்த சைவர்க்கும், ஏனைச்சைவர்க்கும் தமிழுரிமையுடையாரனைவர்க்கும் இன்றியமையா நலன்கள் பல தருவதாகலின், இதனைச் சமயச் சார்புபற்றி ஒருவகையான் ஆராய்வதனோடு, யாவர்க்கும் பயன்படுமாறு, பொதுவகையானும் ஆராய்தல் ஏற்புடைத்து.

சித்தாந்த சைவமாவது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானருளிச்செய்த முதனூல்களாகிய வேதாகமங்களின் வழிவந்த உண்மைச் சமயமாய், விண்ணவர் மண்ணவர் யாவருங் கைக்கொண் டொழுகுவதாய், எவரானும் எக்காரணம் பற்றியும் மறுக்கக் கூடாததாய், எல்லாச் சமயங்களையுந் தன்னுளடக்கித் தானே முடிந்த முடிவாய், சிவபிரானருளிய வேதம்போல யாவராலும் வழிபடத்தக்க உருத்திர மூர்த்தியின் மகிமையும், வேதசாரமாகிய பதினெண் புராணங்களும், இதிகாசங்களும், வைசேடிகம், நையாயிகம், மீமாம்சை, வேதாந்தம், சாங்கியம், யோகம் என்னும் ஆறு மார்க்கங்களையுந் தன்னுளடக்கித் தத்துவங்களின் உண்மைகூறும் பெருமையுடைய ஓர் செம்மை நெறி என்க. ஆகலின் இப்பெரு நெறியாகிய சைவசித்தாந்த உண்மைப் பொருள்களை நன்குணர விரும்புவோர் வேதமும், வேதாங்கமும், உபவேதமும், உபாங்கமும் ஆகிய பதினெண் வித்தைகளையும், திருவுந்தியார் முதலிய பதினான்கு சித்தாந்த சாத்திரங்களையும், தசகாரியம் முதலிய பண்டார சாஸ்திரங்கள் பதினான்கினையும், சிவதருமோத்தரம், துகளறு போதம், சைவ சமய நெறி, இறைவனூற்பயன் முதலிய சைவநூல்கள் பலவற்றையும் உணர்வதனோடு, இவையனைத்தையும், வெளிப்படையாகவுந் தெளிவாகவும் விளக்கிக்கூறும் திருமுறைகள் பன்னிரண்டையும் உணர்தல் மிகப் பயனுடையதாம்.



செந்தமிழ் மறைகளாய இத் திருமுறைகளை ஆராய்ந்துணரும்வழி, இத்திருமுறைகளை அருளிச் செய்தார் யாவர் ; இவை எவ்வாறு வெளியாயின ; இவற்றை உலகிற்கு உதவினர் யாவர்; எவ்வாறு திருமுறைகளாயின? எனப் பலவாறு ஆசங்கை நிகழுமன்றே ? இவ்வினாக்கட்கு விடையிறுக்குங்கால் ஈண்டு நாம் எடுத்துக்கொண்ட நம்பியாண்டார்நம்பிகளின் வரலாறு முன்னர் அறியப்படுவதாகும்.

சரித்திர ஆராய்ச்சியிற் றெளிந்த பெரியார் நமது பண்டைய வியல்புகளை ஆராய்ந்து தக்க ஆதாரங்களுடன் பின் வருமாறு வகுத்துக் கூறுகின்றார்கள்.

கி - மு - 600 முதல் கி - மு - 200 வரையில் வேதாகம சம்மதமான வைதிக சமயமும், கி - மு - 200 முதல், கி - பி - 150 வரையில் புத்த சமயமும், அது முதல் 500 வரையில் சைனசமயமும் பரவிவழங்கின வென்றும், இக்காலங்களில் சங்க நூல்களும் சங்கமருவிய நூல்களும் வழங்கினவென்றும், இலக்கணம் அகத்தியமுந் தொல்காப்பியமுமென்றும், கி - பி - 500 முதல் - 950, வரை பிராமணர்களது ஸ்மார்த்தமதம் ஓங்கிய காலமென்றும், கடவுளை வழிபடுதற்குரிய தோத்திரங்களாகிய தேவார திருவாச

கங்கள் ஏற்பட்ட காலமென்றும் 950, முதல் - 1200 வரை பல வகைப்பட்ட சமயபேதங்கள் பரவிய காலமென்றும், ஒருபாஷை நூலைப் பிறிதொரு பாஷையின் மொழி பெயர்த்தல் நிகழ்ந்தகால மென்றும், இலக்கணந் தொல்காப்பிய மென்றும், 1200, முதல் 1450, வரை, வெவ்வேறு வகைப்பட்ட சமயக் கொள்கைகளைப் பேதமின்றி ஒற்றுமைப்படுத்திய காலமென்றும், உரையாசிரியர் கள் வாழ்ந்த காலமென்றும் 1450—1850 வரை பலவகைப் பட்ட நவீன கொள்கைகள் பரவிய காலமென்றும், பலவாறுகப் பரவிக் கிடக்கும் நூல்களும் உரைகளும் தோன்றிய காலமென் றும், இலக்கணம் நன்னூலென்றும், இவற்றுள் கி-மு 600-முதல் கி-பி 500-வரையுள்ள காலத்தைப் புராதன காலமென்றும், கி-பி 500 முதல் 1200 வரையுள்ள காலத்தை மத்திம காலமென் றும், 1200 முதல் 1850 வரையுள்ள காலத்தை நவீன கால மென்றும் மூவகையாகப் பிரித்தும் வழங்கி வருகின்றார்கள். நூற் சார்பாக ஆராயும் வழி இம்மூவகைக் காலங்களுள், தோத்திரங் களாகிய தேவார முதலிய எழுந்த காலமாகிய மத்திம காலத் தின் முற்பிரிவாகிய கி-பி 500 முதல் 950 வரையுள்ள காலமும் அதற்குப் பின்னிட்ட சில வருடங்களுமே இவண் ஆராய வேண் டியுளது.

இக்காலத்திற் பிராமணர்கள் எங்கும் பரவித் தங்கள் மதக் கொள்கைகளைப் பரவச் செய்தமையாலும், அவர்கட்கு முன் இந்நாட்டிற் பரவிய சைனர்களும், புத்தர்களும் தங்கொள்கை களை யாவர்க்கும் போதித்து உலகைத் தம்வழிப் படுத்தியதா லும், பழமையும் மேன்மையும் பொருந்திய வேதாகம சம்பந்த மான வைதிகசமயம் நிலைபெற்றும் ஆக்கமுறாது மங்கலுற்றது. இதுபற்றியே

மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதிஅரு மறைவழக்க மருகியானடியார் பாற்
பூதி சாதனவிளக்கம் போற்றல் பெறுதொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாதவிருதயர் தாமிட ருழந்தார்.

என்ற அருமைத் திருவாக்கும் எழுந்தது.



அதனாற் பெரும்பாலார் புறச்சமயநெறி யொழுகித் தங் கட்கு அழிவுதேட நேர்ந்தமையின், கருணைக் கடலாகிய எம்பி ரான், கைம்மாறற்ற பெருங்கருணையினால் சைவசமயத் தாபன ஆசாரியர்களைத் தோற்றுவிப்பது அவர்தம் இன்றியமையாக் கடன்மையாயிற்று. அவ்வாறு தோற்றுவிக்கப் பெற்றோரே நமது ஆளுடைய பிள்ளையார் முதலிய சைவப் பெரியோர்கள். இவர்கள் அருளியனவே தேவாரமாதிய தமிழ்மறைகள்.

திருவருள் மூர்த்திகளாகிய பிள்ளையார் முதலிய சைவசமய குரவர்கள், உலகத்தில் அவதரித்துப் பரமதங் களைந்து சிவ மதம் வளர்த்து அனைத்துயிரும் ஈடேறச் செய்தனர். பின்னர்ச் சில பகல் கழிய இப்பெரியார் மரபும், இவர்களருளிய தமிழ் மறைகளும், மீண்டும் மறைவுற்று சிற்சில பாகமே அருகி வழங் குவவாயின. அக்காலத்து மறுபடியும் அவ்விறைவன் திருவரு ளாலன்றி வேறெவ்வகையானும், அவற்றின் முழு விவரங்களை யும் உணர்தலாகாமையின், அவற்றை உணர்த்த அவ்விறைவ னருளா லவதரித்த ஒரு குருமூர்த்திகளி னுதவியும் அவர்கட்குச் சார்பாக அவ்விறைபணிக்கு வேண்டிய உதவிபுரியும் ஒரு பெரு மன்னவரின் உபகாரமும் வேண்டுவது முக்கியமாகின்றது. அவ் வாறு அவதரித்த குருமூர்த்திகளே நாம் எடுத்துக்கொண்ட நம்பியாண்டார் நம்பிகளும், மன்னவர் திருமுறைகண்ட இராஜ இராஜ சோழபூபதி அவர்களும் ஆவார் என்க.

பட்டினப்பாலை முதலிய பழந்தமிழ் நூல்கள் பலவற்றுற் புகழ்ந்து கூறப்படுகின்ற கரிகால்வளவன் முதலிய முடிமன்னர் களாற் காடுகெடுத்து, நாடாக்கிக், காவிரிக்கரை யுயர்த்திக் காவி ரிப்பூம்பட்டினம், உறையூர் முதலியவற்றைத் தலைநகரமாகக் கொண்டு மிக்க சீருடன் எல்லாவளனும் ஓங்கவும், யாவரும் புனலுடனப் போற்றவும், இடையிடையே பெரிய நீர் நிலைகளை அமைத்து எல்லா நகரங்களும் வளமுறச் செய்யப்பெற்ற இச் சோழ தேசம் கூறிய மன்னன் கரிகாலனுக்குப்பின், இடை யிட்ட சிலகாலம் பல்லவ அரசர்கள் ஆட்சிக்குட்பட்டு தனது புராதன வளங்குறைய மீண்டும் அச்சோழ வம்சத்தில் உதித்த

விசயாலயன் என்னும் சோழ பூபதியால் முன்போல் திருத்த முற்றுச் செம்மை எய்திற்று. விசயாலயனுக்குப்பின் ஆதித்தன் I பராந்தகன் I அறிஞ்சயன், பராந்தகன் II இவர்களால் செங்கோல் வழுவாது சீர்பெற ஆளப்பெற்றது. இவர்கள் வரலாறு விரிக்கிற் பெருகும்.

இரண்டாவது பராந்தகன் ஆட்சி புரியுங்காலத்து, அவன் குமாரராகிய ஆதித்தன், இராஜ இராஜன் இருவரும் மிக்க இளமைப்பருவ முடையரா யிருந்தமையின், தனது சிற்றப்பன் மகனை மதுராந்தகனுக்கு முடி சூட்டித் தன்மகன் ஆதித்தனை இளவரசனாக்கி விண்ணுலகஞ் சென்றான். மதுராந்தகன் அரசுபுரியுங் காலத்து இளவரசனான ஆதித்தன் காலஞ் சென்றமையால், அவனது சகோதரனான இராஜ இராஜன் இளவரசனாகி நகரத்தார் வேண்டியும், மதுராந்தகன் ஆளும் வரையில் நான் மன்னனாக முடி சூட்டிக்கொள்ளேன் என மறுத்துப் பின் அவன் காலஞ் செல்ல அப்பால் (985-ல்) தங்கள் மரபின் பரம்பரையாக வழங்கி வரும் ஆதித்தன் இராஜகேசரிவர்மனென முடி சூடி அது முதற் பத்து வருடங்கள் தனது நாட்டைப் பிறர் கொள்ளாதவாறு பலப்படுத்தித் தகுந்த சேனைகளைத் திரட்டிப் பின் பராதீனமாகி யிருக்கிற சோழநாட்டின் பகுதிகளைத் தன் வழிப்படுத்தி உன்னத நிலையிற் கொண்டுவரவும், புறநாட்டரசர்களை வென்று தன் ஆளுகைக்குட்படுத்தவும், கருதி முடிசூடிய பத்தாம் ஆண்டில் மேல்நாடு சென்று ஆண்டுள்ள காந்தளூர்த் துறைமுகத்துள்ள ஏனைய அரசர்களது மரக்கலங்களை அழித்து அத்துறைமுகந் தன்னதாக்கி, அந்நாட்டரசனாகிய சேரனை வென்று அப்பால் மதுரையில் வாழும் பாண்டியனையுந் தோல்வியுறச் செய்து, இம்மூன்று நாட்டிற்குந்தானே தலைவனாக மும்முடிச் சோழனெனப் பெயர்பெற்று விளங்கினான். இவனிடந் தோல்வியுற்ற பாண்டியன் பெயர் அமரபுஜங்கன் என்ப.

(தொடரும்)



# சிவதலங்களின் திருப்பெயர் வரலாறும், சீகாழிப் பன்னிரு திருப்பெயர் வரலாறும்

[கோயமுத்தூர் C. K. சுப்பிரமணிய முதலியார் B.A.,]

ஆறுவகை அறிவுகளையுமுடைய மனிதர்கள்தானும் அசேதனப் பொருள்களாகிய கல் (Stone) என்றும், மலை (Hill) என்றும், மரம் (Wood) என்றும் பலவாறு பெயர் வைத்துக் கொள்வது இக்காலத்தின் கோலமாக இருக்கின்றது. அதுவே நாகரிகமாக நாமும் கருதி நமது முந்திய பெயரை மாற்றி விகாரப்படுத்தி வழங்குவது காலத்தின் கொடுமை. வெங்கடாசலம் V. சலம் V. Challam. ராகவன் R. Van. ஆகிறார்கள். சடகோபாசாரி வெங்கடாசாரிகள் சாரியாய் விடுகிறார்கள் என்றால் சுப்பிரமணியன் S. மணியனாவதற்கு என்ன தடை? மனிதர்கள் மரத்தையும் கல்லையும் தம் பெயராக வழங்குவது நாகரிகம் என்று கொள்ளப்படும் இக்காலத்தில் ஊர்களின் பெயரைப்பற்றிப் பேசுவது வைதிகக் கருநாடகப்பிடுங்கல்களின் வீண்பொழுதுபோக்கு என்று தற்காலச் சிறுவர்கள் எள்ளி நகையாடுவர். அந்தந்தப் பெயர்களாலே குறிக்கப்பெறுவதற்குரிய யாதொரு பூர்வ சரித்திரமும் இல்லாத புதிய மக்களுக்கு இவர்கள் கொள்கை ஏற்றதாகும். நேற்றுத்தான் மனிதரானவர்கள் என்ன பேர் வைத்துக் கொண்டாலுமென்ன? பழங்குடிகள் பேரை மாற்றிக்கொள்வரோ? மாற்ற வுடன்படுவரோ? ஊர்களின் பேரும் அப்படியேதான். புதிதாய்க் காடுவெட்டி இன்று ஒரு நகர் உண்டாக்கினால் அதற்கு என்ன பெயர் வேண்டுமானாலும் வைக்கலாம். ஆனால் உலக சரித்திரத்திலும் ஆன்ம முன்னேற்றத்திலும் பண்டைக்காலந்தொட்டு உபகாரம் செய்த இடங்களாகிய நகரங்களின் பெயர்களை உச்சரித்த மாத்திரத்திலே அந்த உபகாரங்களும் அவற்றின் வரலாறுகளும் நமக்கு முன் வந்து நின்று கொள்கின்றன.

* * *

தலங்களின் பெயர்களிலே பல பொருள்கள் நமக்குக் கிடைக்கின்றன. பொருள்கள் பல கிடைக்கவே அவற்றை ஒட்டிய பல நினைவுகள் நமக்கு உண்டாவதற்கு அப்பெயர்கள்

அறிகுறியா யிருக்கின்றன நினைவு வரவே மனமானது அவ்வப்பொருள்களைப்பற்றிய அநுபவத்தை அடைகின்றது. அநுபவம் உண்டாகவே ஆனந்தம் விளைகின்றது. அதுதானும் சிவபெருமானைப்பற்றியதான் விளைகிறதானால் நண்ணரிய சிவானந்த ஞானமயமே யாகிறது. அஃது அடிக்கடி நிகழ்கின்றபோது நித்தியானந்தமாகப் பலிக்கின்றது. சிவபெருமானுடைய திருப்பெயர்களைச் சொல்லிக் கொண்டிருப்பவர்கள் அவன் எழுந்தருளி யிருக்கும் திருத்தலங்களையும் எப்போதும் வரிசையாகச் சொல்லிப் பழகுவர். தேவாரத் திருப்பதிகங்களை தலமுறையாக வகுத்த தலமுறை அமைப்பிலே சோழநாட்டிலே காவிரிக்கு வடகரையிலே சிதம்பரம் முதல் திரு ஈங்கோய்மலை வரை 63 தலங்களும், காவிரிக்குத் தென்கரையிலே திருவாட்போக்கி முதல் திருக்கோடிகுழகர் வரை 127 தலங்களுமுள்ளனவாக அமைத்து வகுத்திருக்கின்றார்கள். அவ்வாறே ஈழநாட்டிலே திருக்கோணமலை திருக்கேதீச்சரம் என்ற இரண்டும் பாண்டிநாட்டிலே திருவாலவாய் முதல் திருநெல்வேலி வரையும் 14-ம் மலைநாட்டிலே திருவஞ்சைக்களம் ஒன்றும், கொங்குநாட்டிலே திரு அவிநாசிமுதல் திருக்கருவூர் ஆநிலை வரை ஏழும், நடுநாட்டிலே திருநெல்வாயி லரத்துறை முதல் திருவண்ணாமலை வரை 22-ம் தொண்டை நன்னாட்டிலே திருக்கச்சியேகம்பம் முதல் திரு இரும்பைமாகாளம் வரை 32-ம், துளுவநாட்டிலே திருக்கோகாணமாகிய ஒன்றும், வடநாட்டிலே திருப்பருப்பதம் முதல் திருநொடித்தான்மலை ஈறாக ஐந்தும் ஆகச் சிவதலங்களை வரிசைப்படுத்திப் பெரியோர் வழங்குவர். காவேரிக்கு வடகரையிலே உள்ள 63 திருத்தலங்களின் வரிசையிலே சீகாழி 14 வது திருத்தலமாகும். இதுபோலவே ஏனைய நாடுகளிலும் அந்த அந்த தலம் அந்த அந்த நாட்டுத் தல வரிசையிலே இத்தனை இத்தனையாவது தலம் என்று வரிசை எண்குறித்து எண்ணப் பெறுவதாகும். உதாரணமாகத் திருப்பட்டீச்சுரம் காவேரிக்குத் தென்கரையில் உள்ள 127 தலங்களிலே இருபத்து மூன்றாவதாகும். திருநெல்வேலி பாண்டிநாட்டுப் பதினான்கு தலங்களிலே இறுதியான பதினான்காவது தலமாகும். திருப்பாண்டிக்



கொடுமுடியானது கொங்கேழு தலங்களிலே ஆறாவது தலமாம். நடுநாட்டு இருபத்திரண்டு தலங்களிலே பதினான்காவது தலம் திருவெண்ணெய்நல்லூராகும். திருமயிலாப்பூரைத் தொண்டை நன்னாட்டுத் தலங்களிலே இருபத்து நான்காவது தலமாக எண்ணுவர். இந்த வரிசையினை மனப்பாடம் பண்ணித் தினந்தோறும் பாராயணமாகக் கொண்டோதும் பெரியாரும் உண்டு. அவர்களை இன்னதலம் எங்கே இருக்கிறதென்று கேட்டால் தலமுறை அமைப்பிலே இன்ன நாட்டிலே தலவரிசையில் இத்தனையாவது தலம் என்று உடனே சொல்லுவர். புத்தகத்தையும் அட்டவணையையும் பூகோள படங்களையும் தேடார்.

* * * *

தலங்களின் பெயர்களைக் கணித்தலினாலே உண்டாகும் பயனை மேலே தலைப்பிலே கண்டோம். இதுபற்றியே நமது செந்தமிழ்ச் சைவப்பரமாசாரிய மூர்த்திகளாகிய திருஞானசம்பந்தப்பெருமான் திருக்ஷேத்திரக்கோவைப் பதிகத்தினையும், திருநாவுக்கரசு சுவாமிகள் திருக்ஷேத்திரக்கோவைப் பதிகத்தினையும், திருநாவலூர் நம்பிகள் ஊர்த்தொகைத் திருப்பதிகத்தினையும் அருளிச் செய்தார்கள். இவற்றை நாடோறும் பாராயணம் செய்யுமாறு அகத்தியமாமுனிவர் சிவாலயமுனிவருக்கு அருளிச் செய்து தமது தேவாரத்திரட்டு இருபத்தைந்து பதிகங்களிலே இவற்றையும் சேர்த்துத் தொகுத்துக்கொடுத்தருளினர். வாகீசப் பெருந்தகையாரது திரு அடைவு திருத்தாண்டகம், காப்புத் திருத்தாண்டகம் என்ற திருப்பதிகங்களும் இக்கருத்துப் பற்றியே அருளிச் செய்யப் பெற்றனவாம். இப்பொருள்பற்றிய திருப்பதிக்கோவையும் பெரியோர் செய்துள்ளார்கள்.

* * * *

'மானிடப் பிறவி தானும் வகுத்தது மனவாக் காயத்(து)
ஆனிடத் தைந்து மாடும் அரன்பணிக் காக வன்றே
வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்
ஊனெடுத் துழலும் ஊமர் ஒன்றையு முணரார் அந்தோ'

என்பது பெரியோர் திருவாக்கு. பெரிய தவங்களைச் செய்து போகம் வேண்டிப் புரந்தரன் முதலான தேவர்கள் பொன்

னுலகத்திலே போகம் அநுபவிப்பர். தேவர்கள் நம்மினும் மிகப் பெரியவர்கள். மிக்க வாணாளும், ஒளியும், வலியும், அறிவும் உடையவர்கள். அமிர்தபானம் பண்ணிச் சாவாமை பெற்றனர். ஆயினும் அவர் அவ்வப்போது பட்டபாடுகளுக்கும் அளவில்லை. அரக்கர்களால் அலைக்கப் பெறுவர். போகத்திலே மூழ்கி அரனை மறந்து செய்த அபசாரங்களுக்காக வீரபத்திரரால் பற்பல தண்டம் உறுத்தப் பெற்றார். சூரபன்மாதியர்களாற் கொடுந்துன்ப முற்றார். இக்கொடுந் துன்பங்களை அநுபவிக்குந்தோறும் அநுபவிக்குந்தோறும் "ஐயோ நாம் அமிர்தமுண்டு ஏன் சாகாமை பெற்றோம். இச்சங்கடம் உறுதலினும் சாதலே நன்று" என்று,

"எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி யெண்ணி
ஏழைநெஞ்சம் புண்ணா" யலைந்த காலங்களு முண்டு.

தேவ உலகத்திலே போகம் நுகர்தற்கேயன்றி சிவதர்மமாகிய நற்கருமஞ் செய்யவும் புண்ணியந் தேடிக்கொள்ளவும் இடமில்லை. அது செய்யவேண்டுமானால் நம்மினும் மிகுந்தோராய் நாம் எண்ணும் தேவர்கள்கூட இந்த நமது மண்ணுலகத்திற்குத் தான் வருதல் வேண்டும். இதுபற்றியேதான், மேலே காட்டிய பாட்டிலே "வானிடத்தவரும் மண்மேல்வந் தரன்றனை அர்ச்சிப்பர்." என்று அருளிச் செய்யப்பெற்றது. பூமியிலே போய்ப் பிறந்து சிவ புண்ணியங்களைச் செய்யாமல் நாம் வீணே நாள் கழிக்கின்றோமே. பூவுலகத்திலேதானே சிவபெருமான் நம்மை ஆட்கொள்ளுமாறு சாதனங்கள் உள்ளன என்று கவலைகொண்டு மகாவிஷ்ணுவும் பிரமாவும் ஏங்கி நிற்கின்றார்கள் என்று மணிவாசகப் பெருமானார் அருளிச் செய்துள்ளார்கள்.

"புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே! இந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறைவாய்! திருமாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்படவும்........."



என்ற திருப்பள்ளியெழுச்சிப் பாசுரங் காண்க. இவ்வாறு தேவர்களும் சிவபுண்ணியம் செய்து ஈடேறும்பொருட்டு நமது உலகத்திலே வருகின்றார்கள். நாமோ இவ்வுலகத்திலே இருந்தும் மின்போல் மறையும் உடலையும் பொருளல்லாத பொருளையும் போகங்களையும் நிலையென மருண்டு நமது அற்ப ஆயுளையும் வீணாக்குகிறோம்.

அன்பர்களே! இத்தனை அபிப்பிராயங்களும் ஒவ்வோர் சிவதலங்களின் பெயர்களைச் சொன்ன மாத்திரத்திலே நமக்குக் கிடைக்குமானால் இத்திருப்பெயர்கள் செய்து நிற்கும் உபகாரத்தினை இவ்வளவென்று சொல்ல முடியுமோ!

எடுத்துக்காட்டாக ஒரு சில சொல்வேன். காவேரிக்குத் தென்கரையிலே 22-வது தலமாகிய திருச்சத்திமுற்றம் 'மட்டார் குழலி மலைமகள் பூசை மகிழ்ந்தருளு (ச. தேவாரம்) வதைக் காட்டிநிற்கிறது. 'அனேகத''மாகிய விநாயகக் கடவுள் பூசித்த தலம் தொண்டை நாட்டின் 4-வது தலமாகிய திருக்கச்சி அனேகதங்காவதமாகும். காவேரிக்கு வடகரையிலே உள்ள சோழ நாட்டுத் தலங்களிலே 41-வது தலம் திருச்சேய்ஞலூராகும். இது 'சேயா'கிய முருகக்கடவுளால் தாபித்துப் பூசிக்கப்பெற்றது. பிற்காலத்திலே 'சேய்' என்ற முறைமை பெற்று, "அந்த உடம்பு தன்னுடனே அரனார் மகனா''ராகிய சண்டீசப் பெருமான் முத்திபெற்ற தலமுமாம். திருமுருகன்பூண்டியும் முருகன் பூசித்த தலம். திருநாகேச்சுரம் (ஆதிசேடன்), திருஇராமேச்சுரம் (இராமர்), திருப்புள்ளிருக்குவேளூர் (புள்=சடாயு=சமாதி: இருக்கு=வேதம்: வேள்=முருகக்கடவுள், செவ்வாய்: ஊர்=சூரியன் பூசித்ததைக் காட்டும் பெயராதல் காண்க.) திருத்தருமபுரம் (தருமராசன்), திருமாணிகுழி (விஷ்ணுமூர்த்தி வாமனாவதாரத்திலே பூசை), திருமாற்பேறு (மால் பூசித்துப் பேறு பெற்ற தலம்), திருவாரூர் (இலக்குமி), திருமறைக்காடு (வேதங்கள்) முதலியன தேவர் பூசித்துப் பேறுபெற்ற தலங்களாகும்.

திருவோணகாந்தன்றளி (ஓணன் காந்தன் என்னுமிரண்டு அசுரர்கள்), திரு இடும்பாவனம் (இடும்பன்), வடகுரங்காடுதுறை (வாலி), குரக்குக்கா (அனுமன்) போல்வன அசுராதிகள் பூசித்தனவாம். அகத்தியான்பள்ளி முதலியன முனிவர்கள் பூசித்தமையைக் காட்டி நிற்பன.

"சொல்லரும் புகழான் றொண்டைமான் களிற்றைச் சூழ்கொடி முல்லையாற் கட்டிட்டு, எல்லையில் இன்பம் அவன்பெற வெளிப்பட்டு அருளிய" (சுந்தரர் - தேவாரம்) வரலாற்றைத் திருமுல்லைவாயில் குறிப்பதாகும்.

திருநள்ளாறு, நளன் பூசித்ததைக் காட்டும். திருப்பாண்டிக்கொடுமுடி ஒரு பாண்டியனுக்கு உற்ற கறைநோய் போக்கியது. எனவே, இச்சில எடுத்துக்காட்டுக்களால் இத்திருத்தலங்களின் பெயர்களே மக்கள் தேவர் நரகர் எனப்பட்ட உயர்திணைச் சீவர்கள் யாவர்களும் சிவபெருமானை அருச்சித்துப் பேறுபெற்ற வரலாறுகளை நமக்கு நினைப்பூட்டுகின்றன. உயர்திணைப்பொருள்கள் மட்டுமா ? திருநாரையூர் (நாரை) திரு ஈங்கோய்மலை (ஈ) திரு எறும்பியூர் (எறும்பு) திருக்கழுக்குன்றம் (கழுகு - இன்றும் நிகழ்வது) திருவானைக்கா (யானை—சிலந்தி) திருக்காளத்தி (அத்தி=யானை) காளம்=பாம்பு) திருக்கரவீரம் (கரம்=கழுதை) இவை போல்வன அஃறிணையின் பகுதியிலே பட்ட அறிவில்லாத பறவை விலங்காதியினவும் பூசித்துப் பேறுபெற்ற வரலாறுகளை விளக்கி நிற்பனவாம். திருவிற்கோலம் சிவபெருமான் திரிபுரசம்மாரத்தின்பொருட்டு வில் ஏந்திய கோலத்தோடு வீற்றிருந்த தலம்.

திருநெல்வேலி (ஒரு அன்பர் திருப்பணிவிடைக்காக வைத்த நெல்லை வெள்ளங்கொண்டு போகாமல் வேலியிட்ட கருணைச் செயல்.) என்பனபோன்ற பெயர்கள் சிவபெருமானது கருணைத்திறமும் அவர் ஆன்மாக்களை அனுக்கிரகிக்கச் செய்த வீரங்களையும் விளக்கி நிற்பனவாம். எனவே, இத்திருப்பெயர்களைச் சிந்தித்த மாத்திரத்திலே பரமேசுவரன் உயிர்களுக்கு அருளுங் கருணைத்திறமும், அவ்வாறே அவனைப் பூசித்து மக்களும் தேவரும் நரகரும் மற்றும் அஃறிணை உயிர்களும் அடைந்த பேறுகளும்



நமக்குப் புலனாகின்றன. இதனை அறியாது வீணாள் போக்கிப் "பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்ற" நமது சிறுமையும் மடமையும் ஒருங்கே நமக்குப் புலனாகும். நிற்கவே, மடமை நீங்கிச் சிறுமை ஒழிந்து பூசித்துப் பெருமை பெறுவோம்.

இனி, இத்திருத்தலங்களில் ஒன்றாகிய சீகாழித் தலத்தின் பெயர்களைச் சிறப்பு வகையாலே சிறிது ஆராய்ந்து இக்கட்டுரையை முடிப்போமாக.

(தொடரும்)

---

## முடங்கல்

[திருச்சி பண்டிதர் மு. வேங்கடசாமி நாட்டார்]

பல்லாயிர ஆண்டுகளாகப் பனுவல்களும் ஆவணங்களும், பிறவும் இந்நாட்டிலே பனையோலையிற் றீட்டப்பெற்று வந்தன. ஓரிடத்திலிருந்து பிறிதோரிடத்திற்குச் செய்தி தெரிவிக்க வேண்டின் அதனைப் பனையோலையில் எழுதிச் சுருள்செய்து காப்பிட்டு ஏவலாளர் முதலாயினார் கைக்கொடுத்துச் செல்லவிடுவது வழக்கம். அதனை ஓலை யென்றும், முடங்கலென்றும் கூறுவர். ஓலையில் எழுதப்படுதலின் ஓலை யென்பது பெயாயிற்று; இலை என்னும் பொருளுடைய பத்திரத்தில் வரையப்படுதலின் பத்திரமென்பது பெயராயினாற்போல பிற்காலத்தே ஓலையென்பது மங்கல மல்லாத செய்தி வரைந்ததாகப் பொருள்படுவதாயிற்று. செய்தி வரைந்த ஓலையை வளைத்துச் சுருள்செய்தமையின் அது முடங்கல் என்னும் பெயர்பெறுவதாயிற்று. முடங்கல்—வளைதல். முடங்கல் வரைதலைப்பற்றிய வேறு சில செய்திகளும் பின் காட்டுவனவற்றால் அறியலாகும்.

சிலப்பதிகாரம், புறஞ்சேரியிறுத்தகாதையில் மாதவி தீட்டிய முடங்கலொன்றைக் கோவலன் பெற்ற வரலாறு காணப்படுகிறது. கோவலன் மாதவி வயத்தனாயொழுகித் தன் முன்னோர் ஈட்டிய பெரும் பொருளனைத்தையும் இழந்து, கானல் விளையாட்

டில் அவள்பால் வெறுப்புற்றுக் கண்ணகியை யடைந்து, கண்ணகி யளித்த காற்சிலம் பிரண்டனையும் வாணிக முதலாகக் கொண்டு மதுரையெய்தி உலந்த பொருளீட்டுவதெனத் துணிந்து, பத்தினியாகிய கண்ணகி நல்லாளொடும் வழிக்கொண்டு, கவுந்தியடிகள் என்னும் சமண சமயத் தவமுதாட்டியாரின் சார்பு பெற்றுச் சென்று சோணாடு கடந்து பாண்டிநாட்டு மதுரைக் கேகுமிடையே, ஒருநாள் இரவு நிலவில் நடந்து செல்லுங்கால் வைகறைப் பொழுதில் 'வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப் புரிநூல் மார்பர் உறைபதி' ஒன்றின் புறத்தையடைந்து மாதவத்தாட்டியொடு காதலிதன்னையும் ஓர் ஒதுக்கிடத்தேயிருக்கச்செய்து, தான் காலைக்கடன்கழித்தற்கு ஓர் நீர்நிலையை அடைவானாயினன், அப்பொழுது மாதவி கொடுத்த முடங்கலுடன் கோவலனைத் தேடிப் பலவிடமும் சுற்றித்திரிந்துவந்த கோசிகனென்னும் வேதியன், கோவலனைக் கண்டும் துயர்மிகுதியால் அவன் உருவம் வேறு பட்டிருத்தலானும், நிறம் மயங்கித்தோன்றும் பொழுதாகலானும் ஐயுற்றவனாய், அது தெளிதற்கு, ஆங்கிருந்த ஓர் குருக்கத்திப் பந்தரை யடைந்து, "கோவலன் பிரியக் கொடுந்துயரெய்திய, மாமலர் நெடுங்கண் மாதவிபோன்று இவ், அருந்திறல் வேனிற்கு அலர்களைந்துடனே, வருந்தினை போலும் நீமாதவி" என்று கூறி, அதனைச் செவியுற்று 'நீ இங்கே கூறிய கூற்றின் பொருள் யாது' எனக் கோவலன் வினவினமையால் ஐயத்தினீங்கித் தெளிந்து, அவனைச்சார்ந்து, இருநிதிக் கிழவனும் பெருமனைக் கிழத்தியும் அருமணியிழந்த நாகம் போன்றும் வருந்தியதும், துன்னிய அற்றமெல்லாம் இன்னுயிரிழந்த யாக்கை போலத் துயர்க்கடலில் வீழ்ந்ததும், ஏவலாளர்கள் எத்திசையிலும் தேடச் சென்றதும், இராமன் பிரிந்த அயோத்தி போலப் புகாரிலுள்ளா ரனைவரும் அறிவு கலங்கியதும், முன்பு வசந்த மாலையால் தனது திருமுகத்தைக் கோவலன் மறுத்ததுகேட்டு மாதவி பள்ளியில் மயங்கி வீழ்ந்ததும், அவளுற்ற துயரங்கேட்டுத் தான் அங்கே சென்றிருந்ததும், மாதவி தன் கையால் ஒரு முடங்கல் வரைந்து 'இதனை என் கண்மணி யனையாற்குக் காட்டுக' என்று சொல்லித் தன்னிடங்



கொடுத்ததும், அதனைப் பெற்றுத் தான் பல தேயங்களும் தேடித் திரிந்ததும் ஆகிய செய்தியெல்லாம் கூறி, மாதவியின் ஓலையைக் கோவலன் கையிற் கொடுத்தான்.

கோவலன் அதனைப் பெற்றவுடன் அதன்மீது இடப்பட்டிருந்த இலச்சினையைக் கண்டான். அவ்விலச்சினை தான் ஓலை மடியின் புறத்து மண்மேல் மாதவியின் குறுநெறிக் கூந்தலால் ஒற்றியதாகும். அது மாதவி தன்னுடன் கூடி யுறைகின்ற காலத்து அவள் கூந்தலின் வாசநெய் பூசிய தன்மையைத் தனக்கு உணர்த்திற்றாகலின், கோவலன் அதனைத் தன் கையால் விரைவில் விடுவியாதவனாய்த் தாழ்த்திருந்து பின்பு விடுவித்து ஏட்டினை விரித்து அதனுட்கிடந்த உரையின் பொருளை உணர்வானாயினன்.

> "உடனுறை காலத் துரைத்தநெய் வாசங்
> குறுநெறிக்கூந்தன் மண்பொறி யுணர்த்திக்
> காட்டிய தாதலிற் கைவிட லீயான்
> ஏட்டகம் விரித் தாங் கெய்திய துணர்வோன்"

இதிலிருந்து ஓலையை முத்திரித்துக் காப்புச் செய்யும் வழக்கம் பண்டிருந்ததென்பது புலனாகின்றது. மாதவி கூந்தலைப் பொறித்திலச்சினை யிட்டதும், அதனாற் கோவலனெய்திய உணர்ச்சித் தன்மையும் அவர்கள் காதலையும் கலக்கத்தையும் வெளிப்படுத்தி உளத்தை யுருக்குகின்றன. இனி, முடங்கலின் வாசகம்வருமாறு:

> "அடிகள் முன்னர் யானடி வீழ்ந்தேன்
> வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்
> குரவர்பணி யன்றியும் குலப்பிறப் பாட்டியோ
> டிரவிடைக் கழிதற் கென்பிழைப் பறியாது
> கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்
> பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி."

இதிலுள்ள முதலடிக்குத் தேவரீர் திருவடிகளைத் திக்கு நோக்கித் தண்டம் பண்ணினேன்; இதனைத் திருவுளத்திலே கண்டருள்க.' என்ற பொருள்கூறி. 'இஃது ஓலை முகப்பாசுரம்

இனி அக்காரிகை பாசுரம்.' என அடியார்க்குநல்லார் உரைத்திருப்பது சிந்திக்கற் பாலது. இஃது ஓலை யெழுதுவோர் தமது தகுதிக்கும் எழுதப்படுவோரின் தகுதிக்கும் இயைய ஓலை முகத்தே முகமனுரை தீட்டுவதோர் வழக்குண்டென்பதனைக் காட்டுகின்றது. வாசகத்தின் பொருளை 'இரவிடைக் கழிதற்கு யான் செய்த குற்றம் ஈதென்றறியாது நெஞ்சங் கையறு நின்றது; அதனைப் பொறுக்கவேண்டும்' என அரும்பதவுரைகாரர் சுருங்கக் கூறினர். அடியார்க்குநல்லார் ஆற்றல்பற்றி விரித்துக் கூறுகின்றார். அதனையும் சேர உணர்ந்து கோடல் நலமெனக் கருதி ஈண்டெழுதுகின்றேம்: "வடிமொழி யுணர்ந்து குற்றந் தீர்ந்த நற்காட்சியை யுடைய உயர்ந்தோனே, இருமுதுகுரவர் பணிவிடை யொழிந்ததன் மேலும் குலத்திற் பிறந்து கற்பை யாளுதலுடையவளுடனே இரவின்கண் நகரிடையைக் கழிந்து போதற்கு வந்த பிழைப்பென்னை? அஃது அறியாது என்பிழைப்போவென்று அவலித்து அரற்றிக் கவலித்துக் கையாற்றின்கண் நெஞ்சழுங்கா நின்றது; என் பிழைப்பெனினும் மகளிர் சொல் குற்றமறுத சொல்லென்று திருவுளம்பற்றல் வேண்டும்; இதுவே யன்றி எனக்கு இப்பொழுது நடக்கின்ற இச்செயலற்வு நன்றன்று; அதனைக் கடியல் வேண்டும்; ஆதலால் இவ்வாற்றான் நினக்கு ஓர் புகழ்க் குறைபாடின்றாகப் போற்றுவாயாக." இதன்கண் ஆற்றலால் வருவித் தெழுதியிருக்கும் பொருள்களை வாசகத்துடன் பொருத்திக் காண்க. அடியார்க்குநல்லார் இங்ஙனம் பொருள் கூறினராயினும், கொண்டு கூட்டின்றி வாசக ஒழுங்கின்படியே பொருளுரைப்பது அஃதோரோலை (திருமுகம்) ஆதற்கும், முறைமைக்கும் ஒத்ததாய் இன்னும் சிறப்புடைத்தா யிருக்குமெனத் தோன்றுகிறது. வாசகத்தின் சுருக்கமும், தெளிவும், இனிமையும், பொருணிறைவும் மிகவும் புகழ்ச்சிக்குரியவாய்க் கற்றோர்க்குக் கழிபேரின்பம் விளைப்பனவாகும். வாசகத்திலுள்ள ஒவ்வொரு மொழியும் பல்காற் சுவைத் தின்புறற்பாலவாய திட்ப நுட்பங்கொண்டு திகழ்கின்றன. இளங்கோவடிக ளென்னும் புலவர் பெருமான் ஏறக்குறைய ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகளின் முன்னரே திரு



முகமெழுதும் பெருமித முறையினை நமக்குக் காட்டி வைத்திருக்கின்றனர்!

அடிகள் தமது சதுரப்பாட்டைப் பிறிதொரு வகையாலும் இங்கே காட்டி யிருப்பது பெரியதோர் இறும்பூது விளைப்பதாகும். மாதவி விடுத்த ஓலையின் வாசகத்தை யுணர்ந்ததும் கோவலன் 'அவள் பால் தீதொன்றுமின்று. என்றீதே' எனத் தெளிந்து தளர்ச்சி நீங்கித் தன் தந்தைக்குக் கோசிகன் வாயிலாகவே ஓர் முடங்கல் விடுப்பானாயினன். அதுதான் மாதவி தனக்கு விடுத்ததே யன்றி வேறன்று. மாதவி தீட்டிய வாசகத்தையும் பொருளையும் கோவலன் கூர்ந்துணர்ந்த பொழுது, அவையே தன் தந்தைக்குத் தான் விடுத்தற்கும் அழகுறப் பொருந்தினமை கண்டு, அம்முடங்கலைக் கோசிகன் கையிற் கொடுத்து 'மாசில் குரவர் மலரடி'யைத் திசை நோக்கித் தொழுதேன் எனச் சொல்லி இவ்வோலையைக் காட்டுகவெனக் கூறி, என் பொருட்டாக அவரெய்தியுள்ள துன்பத்தைப் போக்குதற்கு விரைந்து செல் என அனுப்பினன். காட்டு வழியே நடந்து கொண்டிருக்கும் கோவலன் தன் றந்தைக்குத் தீட்டுமாறு வேறு ஓலையும் கருவியும் எங்ஙன் பெறுகிற்பான் எனக்கருதி அடிகள் தமது மதிவன்மையால் இங்ஙனம் பெண்ணோலையை ஆணோலையாக்கி யளித்தனர் போலும்! இதிலிருந்து தன் ஊரிலுள்ளார்க்குத் திருமுகம் போக்குமொருவன் அங்குள்ளார் பலரில் யாருக்கெழுத வேண்டுமென்னும் முறைமையும் வெளியாகிறது. மாதவி தீதிலளெனத் தெளிந்த கோவலன் அவளை மதிப்பதற்கு இதைப் பார்க்கிலும் இப்பொழுது செய்யத் தக்கது பிறிதில்லையுமாகும். அன்றி அதனைத் தன்பால் வைத்துக் கொண்டிருத்தலும் இப்பொழுது அவற்கு முறைமை யன்றென்பது சிந்திப்பார்க்குப் புலனாகா நிற்கும்.

(தொடரும்)

166171
JL
031-211,N22
125-3-9

# தீபாவலிப்பண்டிகை நிர்ணயம்

[திருவாவடுதுறை யாதீன சோதிட வித்வான்
இ. மு. சுப்பிரமணிய பிள்ளை]

சைவப்பஞ்சாங்கத்தில் தீபாவலிப் பண்டிகை ஐப்பசிமீ 30உ என்றும், மற்றைய சுமார்த்தப் பஞ்சாங்கங்களில் புரட்டாசிமீ 31உ என்றும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. உண்மை இதுவென உலகினர் அறிந்து உரியகாலத்தில் இவ் விரதத்தை அநுட்டிக்கும்பொருட்டுச் சில காரணங்களை இங்கே எழுதுகிறோம்.

மாதங்கள் சௌரமான மாதமென்றும் சாந்திரமான மாதமென்றும் இருவகையாம். சூரியன் ஒரு இராசியில் சஞ்சரிக்கிற காலம் சௌரமான மாதமெனப்படும். சுக்கிலபட்சப் பிரதமை முதல் அமாவாசை முடியவுள்ளகாலம் சாந்திரமான மாதமெனப்படும். (இந்தச் சாந்திரமான உண்மை வரலாறு இதுவெனக் கீழே ஆராய்வோம்.) சித்திரை, வைகாசி, ஆனி முதலியனவாகச் சொல்லப்படும் பெயர்களும்; மேஷம், ரிஷபம், மிதுனம் முதலியனவாகச் சொல்லப்படும் பெயர்களும் சௌரமான மாதங்களையே குறிக்கின்றன. சைத்திரம், வைசாகம், ஜேஷ்டம் முதலிய பெயர்களே சாந்திரமான மாதங்களைக் குறிக்கும். உலகினர் யாவரும் விரதங்களைச் சௌரமான மாதத்திலேதான் அநுட்டிக்கவேண்டும். அவ்வாறு அநுட்டிப்பதே மரபாகவும் இருந்துவருகிறது.

"ஸௌரமாஸே வ்ரதம்குர்யாத் சாந்திரமாநே நகாரயேத்" (விரதத்தைச் சௌரமான மாதத்தில் செய்க, சாந்திரமான மாதத்தில் செய்யாதொழிக),

"ஸர்வேஷாம் ஸௌரமாநகம், பரார்த்தேசாலய யேஷ் வேஷு ஸௌரமாநேந காரயேத் ஸௌரமாநம் விஹாயாத சாந்த்ராதிபி: க்ருதீதத்பதி ஆயுஸ்ரீ புத்ர நாசஞ்ச தத்கர்மம் நிஷ்பலம் பவேத்"—(சகலருக்கும் சௌரமானம் வேண்டும்.



ஆலயங்களிலே சௌரமானத்தாலே செய்யவேண்டும். சாந்திரமானத்தால் செய்வராயின் அக்கர்மம் பயனின்றி முடிவதோடு ஆயுளும் செல்வமும் புத்திரரும் நாசமாம்.) இவை ஆகமப்பிரமாணங்கள்.

இந்த தீபாவலி யென்பது ஆகமங்களிலே திருக்கார்த்திகை தீபாவலியையே குறிக்கிறது. தீபாவலி = தீபவரிசை. திருக்கார்த்திகையிலேயே தீபவரிசைகள் காணப்படுகின்றன. இவ் விழா மிகவும் பழமையானது. மிகப் பழமையானதும் 8000 ஆண்டுகளுக்கு முந்தியதுமாகிய தொல்காப்பியத்திலே இது கூறப்பட்டிருக்கிறது. "வேலி நோக்கிய விளக்கு நிலையும்" (தொல் - பொருள், புறத்திணையியல் 35) இவ்வடிக்கு விளக்கமாக உரையாசிரியர் நச்சினார்க்கினியரும் "கார்த்திகைத் திங்கள் கார்த்திகை நாளிலேற்றிய விளக்கு" என்று குறித்திருக்கிறார். திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகளும்,

"வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான்றொல் கார்த்திகைநாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" (திருமயிலை-பூம்பாவை)

என்றருளிச் செய்திருக்கின்றார். இதனால் இந்த தீபாவலி மிகவும் பழமையான தமிழ்நாட்டுவிழா என்பது புலனாகிறது.

வைணவர்கள் இப்பெயரையே கொண்டு ஐப்பசிமீத்தில் ஓர் விரதம் அநுட்டிக்கத் தொடங்கினர். இவ்விரதத்திற்கு இப்பெயரே பொருத்தமில்லாமை காண்க. இவ்விரதம் இப்போது சில காரணங்களால் பெரும்பாலும் இந்திய ஜனசமூக விசேட நாளாகக் கொண்டாடப்படுகின்றது.

சரசோதிமாலை ஆசிரியராகிய போஜராஜபண்டிதர் (பிராமணர்) அந்நூலில்

"இரவிநற் றுலைசேர் மாதம் இராக்கதிர் குறையும் பக்கம்
வருபதி னான்கு வந்த வைகறைப் பொழுது தன்னில்
உரியநற் பிதிர்க்க ளின்ப முறுதீபா வலியா மென்னும்
மருவிவெந் நீரில் மூழ்கி மகிழ்ந்துநற் றருமம் செய்யே"

என்று கூறியிருக்கின்றார். இரவிநற்றுலைசேர் மாதமென்றால் சூரியன் துலா ராசியில் இருக்கும் ஐப்பசிமாதம். இதனால் ஐப்பசி மாதத்திலேதான் இவ்விரதத்தை அநுட்டித்தல் வேண்டுமென்பது ஏற்படுகின்றது. பிரபல சோதிட சாஸ்திரியாகிய மூஞம்பண்ணை கிருஷ்ண ஜோஸ்யர் தாம் அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ள பஞ்சாங்க கணனம் என்னும் அரிய நூலில் பக்கம் 340-ல் ஆஸ்வீஜபகுள சதுர்த்தசி நரக சதுர்த்தசி என்று குறித்துவிட்டு எங்கே ஆஸ்வீஜமென்றது சாந்திர மாதத்தைக் குறிக்குமோ என்று உலகினர் ஐயுறுதபடி பக்கம் 363-ல் தீபாவலி நிர்ணயம் என்று தலைப்பிட்டு "ஐப்பசிமீ கிருஷ்ண சதுர்த்தசி இராத்திரி நாலாவது ஜாமத்திலிருக்க வேண்டியது" என்று நிர்ணயித்துள்ளார். மதுரைத் தமிழ்ச் சங்கப் பிரசுரமாகிய அபிதான சிந்தாமணியில் பக்கம் 545-ல் "தீபாவலிப் பண்டிகை இது ஐப்பசிமீ கிருஷ்ணபட்சத் திரயோதசி யிரவில் சதுர்த்தசி சம்பந்தமடைகையில் உலகத்தைத் துன்புறுத்தித் துன்ப இருள் மூடச்செய்திருந்த பிரர்க்சோதிடபுரியாண்ட நரகாசுரனைக் கண்ணன் கொன்றதின் பொருட்டுக் களிப்பினால் எண்ணெயிட்டு ஸ்நானம்செய்து விளக்கிட்டுக் களிப்பது" என்பது காணப்படுகிறது. மேலேகண்ட பிரமாணங்களால் தீபாவலி ஐப்பசியாகிய சௌரமாதத்திலேயே அநுட்டிக்கப்படவேண்டும் என்பதும் அவ்வாறு அநுட்டிக்காமல் சாந்திரமாத காலங்களில் அநுட்டிப்பவர்கள் விரும்பிய பலனை இழப்பதோடு பொன்னையும் புத்திரரையும் இழந்து அற்ப ஆயுளையும் அடைவரென்பது தெளிவாகின்றது.

"ஆஸ்வீஜ பகுள சதுர்த்தசி நரக சதுர்த்தசி" என்று குறிக்கப்பட்டிருக்கிறதே, ஆஸ்விஜ மென்பது சாந்திரமாதமன்றோ எனின், கூறுதும். தொன்றுதொட்டு இவ்விந்தியா தேசத்திலே சௌரமான மாதங்களே அநுசரிக்கப்பட்டுவந்தன. அப்போது சித்திரை (மேஷம்), வைகாசி (ரிஷபம்) முதலிய சௌரமாதங்களின் முறையையே அறியாமல் சந்திரன் வளர்ச்சி தளர்ச்சியால் மாதங் குறித்துவந்த சுமார்த்தர்கள் வடக்கேயிருந்து இந்தியாவிற் புகுந்தனர். புகுந்தவர் இந்நாட்டினருடன் கலந்து அவர்களின் பழக்க வழக்கங்களை அநுசரிக்கத் தொடங்கியதோடு தங்கள் திருமணம் முதலிய சுபகாரியங்களில் சௌரமாத முறையையே தழுவிவந்தனர். சித்திரை, வைகாசி முதலிய பெயர்களையே சைத்திரம், வைசாகம் எனத் திரித்து வழங்கத்தொடங்கினர். அதன்முன் அவர்கள் தமக்கென மாதப் பெயர் கொண்டிலர். அப்பழக்க அழுத்தத்தினாலே அவர்கள் இன்னும் கல்யாணங்களை சௌரமாதங்களிற் புரிகின்றனர். மாகமாதத்திலும், ஆஷாடமாதத்திலும் மணம் கூடாதென விதி ஏற்பட்டிருக்கிறபடியால் அவர்கள் கலியாணந் தைமாதத்திலும் ஆனிமாதத்திலும் செய்யாமலிருக்கவேண்டும். மார்கழிமாதத்தில் வரும் புஷ்ய மாதத்திலும், மாசி மாதத்தில் வரும் பால்குன மாதத்திலும் செய்யவேண்டும். அப்படிச் செய்யாது சுமார்த்தர்களோ புஷ்யம், மாகம், ஆஷாடம் முதலிய சொற்களுக்கு தை, மாசி, ஆடி என்றே பொருள்கொண்டு சௌரமான மாதங்களிலேயே மணமுடிக்கின்றனர். கோவிலில் கும்பாபிஷேக முதலிய காரியங்களையும் அவ்வாறே செய்கின்றனர்.

சிலகாலத்தின்பின் சுமார்த்தர்களிற் சிலர் தங்கள் பழைய மாத முறையைக் கைவிடக்கூடாதென நினைத்து, அச்சாந்திர மாதங்கட்கும் இத் திரித்த பெயர்களையே வைத்து வழங்கினர். அப்போது அவர்கள் பௌர்ணமி எந்த நட்சத்திரத்தில் வருகின்றதோ அந்த நட்சத்திரத்தின் பெயரே மாதப்பெயராம் என விதி செய்தனர். (பாணினீயத்தையும் அமரத்தையும் நோக்குக.) சிறிது காலத்தின் பின் பௌர்ணமி இரண்டு நட்சத்திரங்களில் வருவதைக்கண்டு பருவாந்த நட்சத்திரத்தாலேயே மாதப்பெயராகும் எனவும் எந்த நட்சத்திரத்தில் பருவாந்தம் வந்தாலும் முதலில் இட்டபெயரே பெயராகும் எனவும் விதிசெய்தனர் (சூரிய சித்தாந்தம்). இவ்வாறு அவர்கள் அவ்வப்போது தங்கள் விதிகளை மாற்றிக்கொண்டனர். முடிவாக சூரிய சித்தாந்தத்தில் கூறியிருக்கும் விதியும் பொருந்துவதாக இல்லை. ஏனெனில் அதில் கூறப்படாத நட்சத்திரங்களிலும் பருவாந்தம் வருகிறது.

இவ்வாறாக சௌரமாதப் பெயர்களையே திரித்துக்கொண்டு பொருந்தாக் காரணங்கூறி சுமார்த்தரிற் சிலர் சாந்திரமானப்படி சில விரதங்களை அநுட்டிக்கத் தொடங்கியதோடு பிறரையும் தம் வழியிற்றிருப்ப முயன்றபோதுதான் அவ்வாறு விரதங்களை அநுட்டிப்பது கூடாதென்றும் சாந்திரமானத்தில் அநுட்டிப்ப தால் பல பெருங்கேடுகள் விளையுமெனவும் பெரியோர்கள் விதிக ளமைத்தனர். அவ்விதிகளுக்கு ஆதாரமாகக் காட்டப்பட்டன வே முன்கூறியுள்ள இரண்டு வடமொழி மேற்கோள்களும். சௌரமானத்தில்தான் விரதங்களிருக்க வேண்டுமென்பதை வலியுறுத்தும் இத்தகைய மேற்கோள்கள் பலவுள. இது காறும் ஆராய்ந்தவற்றால் சாந்திரமானமெனப் பெயரிட்டு வழங்கும் மாதப் பெயர்களெல்லாம் சௌரமாதம் பெயர்களின் திரிபே என்பதும், சாந்திரமான மெனக்கூறும் அப்பெயர்களின விதிகள் பொருத்த முடையன அல்ல என்பதும், சாந்திர மாதங் களுக்குத் தனிப் பெயர்கள் இல்லாமையால் சைத்திரம், வைசா கம், ஆஸ்வீஜம் முதலிய திரிபுப் பெயர்கள் சௌரமான மாதங் களையே குறிக்குமென்பதும், அதனால் ஆஸ்வீஜபகுளசதுர்த்தசி என்பது ஐப்பசிமீ கிருஷ்ணபட்சச் சதுர்த்தசியே என்பதும், ஆகையால் தீபாவலிப்பண்டிகையை ஐப்பசிமீ 30உ தான் அநுட்டிக்க வேண்டுமென்பதும் பெறப்பட்டன.

ஐப்பசிமாதத்தில் அமாவாசைக்கு முன்தினமும், அன்றும், பின்தினமும் ஆகிய நாட்களில் என்று சுவாதி நட்சத்திரம் வரு கிறதோ அன்றே தீபாவலியாம் என்று சோதிட சாஸ்திரியும் சென்னைச் சட்டசபைத் தலைவருமா யிருந்து காலஞ்சென்ற திவான்பகதூர் L.D. சுவாமிக் கண்ணுப் பிள்ளையவர்கள் இந்தியன் கிரானலஜி, எபிமெரிஸ் என்ற நூல்களிலே குறித்திருக்கின்றனர். அன்னார் தாம் எழுதியதற்கு ஆதாரமாக இந்தியன் ஆண்டிகுவரி 26-வது வால்யூமில் பக்கங்கள் 177-187-ல் புரௌபசர் கெல் ஹார்ன் எழுதிய கட்டுரையைக் காட்டுகின்றனர். இதன்படி ஆராய்ந்து பார்க்கும்போது (சுவாதி நட்சத்திர மென்பதால் (தீபாவலி ஐப்பசி மாதத்தில்தான் வரும் என்பது தெளிவா கிறது. இதனால் இவ்வாண்டில் தீபாவலிப் பண்டிகை ஐப்பசிமீ



30உதான், 29உ இரவு நரகசதுர்த்தசி ஸ்நானம் என்பது நிலைநாட்டப்பட்டது. (அன்று சுவாதியாதல் காண்க.)

இவ்வாண்டில் சுமார்த்தர்கள் இதுவரை குறித்து வந்த கணக்குப்படி மகா சிவராத்திரி தைமீ 29உயில் வருகிறது. நாம் அடிக்கடி நம் பஞ்சாங்கத்தில் எடுத்துக் காட்டியதால் உண்மை யுணர்ந்த சுமார்த்தப் பஞ்சாங்கங்களெல்லாம் (திருநெல்வேலி சுமார்த்தப் பஞ்சாங்கம் போன்ற இரண்டொன்று தவிர) முறைப் படி மகா சிவராத்திரியை மாசிமாதத்தில் குறித்துள்ளன. தை மாதத்தில் குறிக்கவில்லை. இன்னும், வைகுண்ட ஏகாதசி மார்க்க சிரசுத்த ஏகாதசி என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இக் குரோதன வருஷத்தில் போலிச் சாந்திரமானப்படி பார்த்தால் கார்த்திகை மாதம் 11-ந் தேதிதான் மார்க்க சிரசுத்த ஏகாதசி யாம். இப்போலிக் கணக்குப்படி அன்றே வைகுண்ட ஏகாதசி யாதல் வேண்டும். உண்மை யநுட்டானம் அப்படியில்லை. ஏனென்றால் மார்க்கசிரமென்பது மார்கழிமாதமே. ஆதலினா லன்றோ எல்லாப் பஞ்சாங்கங்களும் இவ்வாண்டில் வைகுண்ட ஏகாதசியை மார்கழிமாதம் 12-ந்தேதி சனி போலிப்புஷ்ய சுத்த ஏகாதசி யன்று குறித்திருக்கின்றன. இதனாலே சாந்திரமான மெனக்கொள்ளும் முறை தவறுடையது, சாந்திரமானம் மாதப் பெயர்களெல்லாம் உண்மையில் சௌரமான மாதங்களையே உணர்த்தும் சௌரமான முறையே பிரமாணமானது என்ற உண்மையை அவைகள் உணர்ந்து கொண்டன என்பதாகிறது. ஆதலினாலே இதுவரை ஆராய்ந்ததில் தீபாவலிப் பண்டிகையை ஐப்பசிமாதத்திலே கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசியிலே சுவாதி நக்ஷத் திரத்திலே அநுட்டிப்பதுதான் சாஸ்திரீயமானதாகையால் இவ் வாண்டில் புரட்டாசி மாதத்தில் தீபாவலி என்பது முற்றிலும் பிசகாகும் என்பதும், ஐப்பசிமீ 29உ சனிக்கிழமை இரவு தான் நரக சதுர்த்தசி ஸ்நானம், 30உ ஞாயிற்றுக் கிழமைதான் தீபா வலிப் பண்டிகை என்பதும் நிலைபெறுகின்றமை காண்க. இத னால் சஜ்ஜனர்களை ஐப்பசிமாதத்தில் தீபாவலிப் பண்டிகையை அநுட்டித்து விரும்பியபயனை அடையும்படி வேண்டுகின்றோம்.

---

# * திருக்குற்றாலத் தேவாரம்

[பண் - குறிஞ்சி]

வம்பார் குன்றந் நீடுயர் சாரல் வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோலவண் டியாழ்செய் குற்றாலம்
அம்பா னெய்யோ டாட லமர்ந்தா னலர் கொன்றை
நம்பான் மேய நன்னகர் போலுந் நமரங்காள். க

பொடிகள் பூசித் தொண்டர் பின் செல்லப் புகழ் விம்மக்
கொடிகளோடுந் நாள்விழ மல்கு குற்றாலம்
கடிகொள் கொன்றை கூவிள மாலை காதல் செய்
அடிகண் மேய நன்னகர் போலும் மடியீர்காள் உ

செல்வ மல்கு செண்பகம் வேங்கை சென் றேறிக்
கொல்லை முல்லை மெல் லரும் பீனுங் குற்றாலம்
வில்லி னொல்க மும்மதி லெய்து வினைபோக
நல்கு நம்பா னன்னகர் போலுந் நமரங்காள். ௩

பக்கம் வாழைப் பாய் கனியோடு பலவின் றேன்
கொக்கின் கோட்டுப் பைங்கனி தூங்குங் குற்றாலம்
அக்கும் பாம்பு மாமையும் பூண்டோ ரன லேந்தும்
நக்கன் மேய நன்னகர் போலுந் நமரங்காள். ௪

மலையார் சாரன் மகவுடன் வந்த மடமந்தி
குலையார் வாழைத் தீங்கனி மாந்துங் குற்றாலம்
இலையார் சூல மேந்திய கையா னெயி லெய்த
சிலையான் மேய நன்னகர் போலுஞ் சிறு தொண்டீர். ௫

மைம்மா நீலக் கண்ணியர் சாரன் மணிவாரிக்
கொய்ம்மா வேனலுண் கிளி யோம்புங் குற்றாலம்
கைம்மா வேழத் தீருரி போர்த்த கடவுள் ளெம்
பெம்மான் மேய நன்னகர் போலும் பெரியீர்காள். ௬

---

* இஃது ஓர் பாடல்பெற்ற புண்ணிய தலம். இது தென்காசியி லிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ளது. இங்குள்ள நீர்வீழ்ச்சி கண்ணுக்கு அழகாக விருப்பதோடு மனதுக்கும் மிகுந்த களிப்பை யுண்டு பண்ணும்.



நீல நெய்த நண் சுனை சூழ்ந்த நீள் சோலைக்
கோல மஞ்ஞை பேடையொ டாடுங் குற்றாலம்
காலன் றன்னைக் காலாற் காய்ந்த கடவுள் ளெம்
சூல பாணி நன்னகர் போலுந் தொழுவீர்காள். ௭

போதும் பொன்னு முந்தி யருவி புடைசூழக்
கூதன் மாரி நுண் டுளி தூங்குங் குற்றாலம்
மூது ரிலங்கை முட்டிய கோனை முறைசெய்த
நாதன் மேய நன்னகர் போலுந் நமரங்காள். ௮

* அரவின் வாயின் முள்ளெயி றேய்ப்ப வரும் பீன்று
குரவம் பாவை முருகமர் சோலைக் குற்றாலம்
பிரமன் *னோடு மாலறியாத பெருமை யெம்
பரமன் மேய நன்னகர் போலும் பணிவீர்காள். ௯

பெருந் தண் சாரல் வாழ்சிறை வண்டு பெடை புல்கிக்
குருந்தம் மேறிச் செவ்வழி பாடுங் குற்றாலம்
இருந்துண் டேரு நின்றுண் சமணு மெடுத்தார்ப்ப
அருந்தண் மேய நன்னகர் போலு மடியீர்கள். ௰

மாடவீதி வருபுனற் காழியார் மன்னன்
கோட லீன்று கொழுமுனை கூம்புங் குற்றாலம்
நாடவல்ல நற்றமிழ் ஞான சம்பந்தன்
பாடல் பத்தும் பாட நம்பாவம் பறையுமே. கக

---

## THE TAMIL UNIVERSITY
## தமிழர் பல்கலைக்கழகம்

தமிழ்மக்களின் நன்மையைக் கருதி தமிழ்நாட்டிற்குத் தனிப்பல்கலைக் கழகம் (யூநிவெர்சிற்றி) வேண்டுமென்று 1925-ஞ ஆகஸ்டு மீ 23 உ தஞ்சை நகரில் கூடிய தமிழ் மக்கள் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதற்குரிய வேலையைப் பார்த்து வருவதற்காக இருபது பெயர் அடங்கிய ஒரு கமிட்டியும், அதற்குப் பெருந்தகையாளர் தமிழ்நாட்டிற்கும் வளர்ச்சித்

துறைக்கும் மந்திரியாயுள்ள தி. நே. சிவஞானம் பிள்ளை யவர்கள், பி. ஏ., எம். எல். சி., தலைவராகவும், திருச்சி பிஷப் ஈபர் (எஸ். பி. ஜி.) கல்லூரி ஆங்கில ஆசிரியர் எம். எஸ். பூர்ணலிங்கம் பிள்ளை, பி. ஏ., எல். டி., அமைச்சராகவும், அமைக்கப்பெற்று வேண்டியன செய்யப்பட்டு வருகின்றன. இப்பல்கலைக்கழகம் தமிழ் நாட்டிலுள்ள பார்ப்பார், பார்ப்பாரல்லாதார், துலுக்கர், கிரிஸ்தவர் முதலான பல வகுப்பினருடைய பிள்ளைகளுக்காகவும் நாட்டின் மேன்மை கருதியும் ஏற்பாடு செய்யப்படுவதால், அதற்கு அரசு முறையில் பலவிதப் பிரிவுகளுண்டாயிருப்பினும், அனைவரும் ஒருங்கே ஒத்துழைக்கக் கடமைப்பட்டவராவர். தமிழ்மொழியைத் தாய் மொழியாகக் கொண்டவரும் தமிழிற் பற்றுடையவரும் இந்தியா, பர்மா, இலங்கை, மோரீஸ், ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா, மடகாஸ்கர் என்ற பல கண்டங்களிலும் தீவுகளிலும் பகுதிகளிலும் பலகாரணத்தை முன்னிட்டுப் போயிருப்பதால் அவர்களெல்லோரும் தங்கள் தங்களாலியன்ற மட்டும் இந்தப் பல்கலைக் கழகத்திற்குப் பொருளுதவி புரியுமாறு வேண்டப்படுகின்றனர். பல்கலைக் கழகத்தித்திற்கு வேண்டிய தொகை ரூ 20 லக்ஷம். துவக்கத்தில் தேவை ரூ 3 லக்ஷம். நாட்டுக்கல்வி அபிமானமுந் தாராள சிந்தையுமுடைய ஆங்காங்குள்ள நண்பர்கள் அமைச்சருக்கு அனுப்புந்தொகை தமிழரின் பல்கலைக்கழகப் பண்டென்று திருச்சிராப்பள்ளி இம்பீரியல் பாங்கில் போடப்படும். தலைவருடைய உத்தரவின்றி ஒரு பைசாவுஞ் செலவு செய்யப்படமாட்டாது கமிட்டியின் அமைச்சர் இருப்பிடம்: 76, ஆண்டார்வீதி, தெப்பக்குளம் தபாலாபீஸ், திருச்சிராப்பள்ளி (சென்னை மாகாணம், இந்தியா.)

---

# குறிப்பு

## கரந்தைத் தமிழ்ச்சங்கம், தஞ்சை 14-ம் ஆண்டு விழா

இச்சங்கத்துப் பதினான்காம் ஆண்டுவிழா, குரோதன ஐப்பசி அ, கூ ஆம் நாட்கள் (24,25-10-25) சனி ஞாயிறுகளில், மகிபாலன்பட்டி 'பண்டிதமணி' திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்கள் தலைமையில்



நிகழும். விரிவுரையியற்ற மனமுவந்திருக்கும் திருவாளர்கள் (இதுகாறும்) சென்னை மணி - திருநாவுக்கரசு முதலியாரவர்கள்; சலகண்டபுரம் அ. வரதநஞ்சைய பிள்ளையவர்கள்; லால்குடி அ. சரவண முதலியாரவர்கள்; மதுரை ஆ. கார்மேகக்கோனாரவர்கள்; திருநாரையூர் மு. முத்துக்குமாரசுவாமிப் பிள்ளையவர்கள் என்று அமைச்சாவர்கள் தெரிவிக்கிறார்கள்.

---

# மதிப்புரை

மங்கையர்க்கரசி:—இப்பெயரிய நூலை எழுதியவர் எம். துரைசாமி முதலியாராவர். இந்நூல் படிக்கப் படிக்க இன்பந்தருகிறது. மங்கையர்க்கரசி யம்மையாரது பிறப்பு, வளர்ப்பு முதலியவைகளைப் படிக்கப் படிக்க யாவரு மின்புறுவர். இஃது எளியநடையில் சிறு சிறு வாக்கியங்களாக அமைந்துள்ளது. பள்ளிமாணவர்களுக்கும் மாணவிகளுக்கும் மிகுந்த பயனையளிக்கும். கதை எழுதுகின்ற முறையும் அழகாக இருக்கிறது. இதுபோன்று பலநூல்கள் வெளிவருமாயின் வசன நூற்கள் இல்லை என்று கவலையுறும் பலரும் களிபேறுவகை எய்துவர். இதன் விலை அணு 5. நமது கழகத்திலேயே கிடைக்கும்.

தனித்தமிழ்க் கட்டுரைகள்:—இந்நூல் வித்யோதய மகளிர் கல்லூரியின் தமிழாசிரியர் திரு. நாகை நீலாம்பிகையம்மையாரால் இயற்றப்பட்ட தனித்தமிழ் நூலாக இலங்குகின்றது. வடமொழி முதலிய பிறமொழிக் கலப்பில்லாது யார்க்கும் விளங்கும்படி எழுதப்பட்ட சிறப்பு இந்நூலிற்கு அமைந்துள்ளது. தனித்தமிழைப் பாதுகாக்கின்ற முறையைப்பற்றிய ஆராய்ச்சியும், மொழிதோன்றி நாகரிகத்திற்கு ஏற்றவாறு வளர்ந்துவரும் முறைமையையும், நாவலந்தீவின் பழைய குடிகளைப் பற்றிய ஆராய்ச்சிக்குறிப்பினையும், கேள்வியின் பெருமையையும், பெண்களுக்கு நூற்கல்வி வேண்டுமென்பதையும், பண்டைப் பெண்மக்களின் அறிவின் சால்பையும்பற்றிய நயம்மிக்க கட்டுரைகள் பல இந்நூலிற் காணப்படுகின்றன. இறந்தோர்வீட்டிற்குச் செல்பவர் நடந்துகொள்ள வேண்டிய முறையையும், உயிர்போன உடம்பிற்குச் செய்யவேண்டியது யாதென்பதையும் எடுத்துரைக்குமாற்றால் தப்பு வழக்கங்களை யகற்றும் முறை இந்நூலுள் ஒரு சிறிது கூறப்படுகின்றது. இறுதியில் பெண்பாலார்க்கு அருளொழுக்கம் வேண்டுமென்பதை இந்நூல் வற்புறுத்துகின்றது. எளிய நடையில் தனித்தமிழ் எழுதுவது கைவருந்தன்மையதென்பது இந்நூலைக் கற்பார்க்கு இனிதுவிளங்கும். நீநூல் பல

160171



வற்றின் மேற்கோள்களும் நகைச்சுவை முதலிய நயங்களும் இந்நூலிற் [illegible]. இதன் விலை ரூ. 1-4-0.

[illegible] பாடப்புத்தகம்:—இந்நூல் காரைக்குடி திருவாளர் அரு. சோமசுந்தரஞ் செட்டியாரவர்களால் சிறுவர் சிறுமியர்க்கு அருளொழுக்கம் போதிக்குங் கருத்தோடு எளிய இனிய தமிழ் நடையில் எழுதப்பெற்றது. இது கண்களைக்கவரும் நல்ல அச்சில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. சிறுபிள்ளைகள் விளையாட்டுப்போக்காகப் பல்வகைச் சிற்றுயிர்கட்குச் செய்யுந்தீங்குகளை எடுத்துக்கூறி அவைகள் தவறு என்று காட்டுவதில் இணையற்றதாக இருக்கிறது. இது பள்ளிக்கூடத்து மாணவர்கட்கு ஒருதலையாகப் பாடமாகவைத்தற்குரியது. இதன் விலை அணா 0-1-6.

அநுட்டான முத்திரைகளும் பிராசாதமாலையும்:—அநுட்டான முத்திரைகளின் இலக்ஷணங்களையும் சிவபூசா முத்திரையின் இலக்ஷணங்களையும்பற்றி முன்னோரால் பாடப்பட்டது. சுருக்கமாகச் செய்யப்பட்ட இனிய செய்யுட்களடங்கியது. பிராசாதமந்திரத்தின் கலைகளைப் பற்றி கமலஞானப்பிரகாச தேசிகர் அருளிய பிராசாதமாலை இதனுடன் சேர்க்கப்பட்டுள்ளது. இது திரு. ஞா. நாகலிங்கத்தம்பிரான் அவர்களால் வெளியிடப்பட்டது. இதன் விலை அணா 2.

நல்லிசைப் புலவர்கள்:—இது மதுரை அமெரிக்கன் கலாசாலைத் தலைமைத் தமிழாசிரியர் திருவாளர் அ. கார்மேகக்கோனாரவர்களால் இயற்றப்பெற்ற இனிய உரைநடை நூல். சங்கம் நிறுவியகாலத்துத் திகழ்ந்த 6 பெரும்புலவரது வரலாற்றினைத் தமிழ் நயம்மிக்கத் தெள்ளிய நடையில் இந்நூல் விரித்துரைக்கின்றது. புலவர் சரித்திரத் தொகுதிக்கும் தமிழிலக்கிய சரித்திரத்திற்கும் நல்லதோர் பகுதியாக அமைவதுடன் பண்டைத் தமிழகத்துள்ள புலவரது உள்ளப்போக்கினையும், பெருமன்னர் குறுநிலமன்னர் முதலியவர்களது வண்மையையும், பண்டைச் செய்யுட் பொருள் நயங்களையும், தமிழ்நாட்டுப் பழைய வழக்கங்களையும், அக்காலத்து ஆடவர் பெண்டிர் கல்வி நிலையையும் செவ்விதின் உரைக்கும் கட்டுரைகள் இதிற் காணப்படுகின்றன. ஆதல்பற்றிக் கலாசாலைத் தமிழ் மாணவர் யாவரும் ஒருதலையாகக் கற்கவேண்டிய நூலாக இஃது இலங்குகின்றது. இதன் செவ்விய தமிழ்நடை எளிதில் யார்க்கும் பயன்படுவதால் தற்கால மாணவரால் பெரிதும் போற்றற்பாலதாகும். இதன் விலை அணா 14. வேண்டுவோர் மதுரை புக்ஷாப், மா. கோபாலகிருஷ்ணக்கோனாரவர்கட்கு எழுதிப்பெற்றுக்கொள்க.

---

Printed by Sivakami Vilasam Press: Published by V. Subbiah for The S. I. S. S. W. P. Society, Ltd., Madras.